THAYAGAM

27.1 - 3.2 . 95

75¢

உண்மை:6
தேடல்:29 | 31

# தாயகம்

# மக்களது ஆதரவு இல்லாமல் எந்த கெரில்லா இயக்கமும் பலகாலம் நின்று பிடிக்க முடியாது

**பிரெஞ்சுப் பத்திரிகைக்கு சந்திரிகா பேட்டி**

"கொரில்லாக்களுக்கு சமாதானம் தேவையில்லை என்றால், நிலைமையை அவர்கள் மோசமாக்குவதைத் தொடர்ந்தால்.. நான் போர் செய்வேன் என்று சொல்லவில்லை. ஆனால் இராணுவ ரீதியாக தன்னைப் பலப்படுத்திக் கொண்ட உறுதியானதும் நேர்மையானதுமான அரசாங்கத்தினால் போரை வெல்ல முடியும். எங்களுக்கு சமாதானம் தான் தேவை. அது புலிகளுக்கும் தெரியும்."

- ★ யுத்த நிறுத்தத்தை புலிகள் மீறுவதாக இராணுவம் குற்றச்சாட்டு
- ★ அடுத்த கட்டப் பேச்சுக்கள் பற்றி புலிகள் பதில் இல்லை
- ★ யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்கள் யாழ்.விஜயம்
- ★ நோர்வே அகதிகளை திருப்பி அனுப்பும்
- ★ காமினி கொலையில் புலிகள் சம்பந்தம்?

இலங்கைக்கான துரித பணமாற்றுச்சேவை
CD விற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# *Niru Brand*®

**நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்**
***Niru Brand*® தயாரிப்புகளே.**

## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம்
பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான**
**நிரு பிராண்ட் தயாரிப்புகளா?**
**என்பதை உறுதிப்படுத்துங்கள்**

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு
எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

தாயகம்
'உண்மையைத் தேடி'

# யுத்த நிறுத்தத்தை புலிகள் மீறுவதாக இராணுவம் குற்றச்சாட்டு

யுத்த நிறுத்தத்தை புலிகள் 200தடவைகளுக்கு மேல் மீறியிருப்பதாக அரசாங்கம் குற்றம் சாட்டியிருக்கிறது. இராணுவ அதிகாரிகள் வெளியிட்ட பட்டியல் ஒன்றில் இந்த மீறல்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை கிழக்கில் நடைபெற்றிருக்கின்றன. இவை சிறியனவாக இருந்தாலும் பெரிய பிரச்சனைக்கு வடிகாலாக அமையும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மீறல்களில் பல புலிகள் கிழக்கில் மக்களிடம் கப்பம் வாங்குவதும் இராணுவ முகாம்கள், சிங்கள கிராமங்களில் நடமாட்டங்களை அதிகரித்திருப்பதும் ஆகும்.

புலிகள் கிழக்கில் வர்த்தகர்கள், சிகரெட் விற்பனையாளர்கள், தபால் கந்தோர்கள், அரசாங்க அதிகாரிகளிடம் கப்பமாக பணத்தை அறவிட்டு வருகிறார்கள். புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களிடம் இது குறித்து முறையிட்ட போதும் இவை குறையவில்லை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிழக்கில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பது குறித்து இராணுவமும் மற்ற தமிழ் அமைப்புகளும் விசனம் தெரிவிததிருக்கின்றன. அவர்கள் கிராமங்களுக்குள் ஆயுதங்களுடன் நடமாடுவதாக அவை குற்றம் சாட்டின. யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி ஆயுதமின்றியே நடமாட முடியும்.

கிழக்கில் பல புலிகள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர். கிழக்கில் ஒரு பொதுமகன் புலிகளால் கடத்தப்பட்டுஅடித்துக் கொல்லப்பட்டிருந்தார். பலருக்கு புலிகள் கொலை மிரட்டல் விடுத்ததுடன் வாகனங்களையும் கடத்தியுள்ளனர்.

பாக்கியன் என்ற புலி ஆதரவாளர் திருகிக் கொல்லப்பட்டிருக்கிறார். மன்னாரில் புலிகளின் ஆதரவாளர்

4ம் பக்கம் பார்க்க..

# அடுத்த கட்டப் பேச்சுக்கள் பற்றி புலிகள் பதில் இல்லை

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்காக புலிகளின் பதிலை அரச எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க பத்திரிகையாளரிடம் பேசுகையில் 'அரசியல் பேச்சுக்களில் ஈடுபடுவது பற்றி புலிகளின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். பாப்பரசர் வந்து போன பின்னர் நடைபெறும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இதுவரை எந்த அறிகுறியும் இல்லை' என்று அவர் தெரிவித்தார். 'ஆனால் இதன் கருத்து பேச்சுவார்த்தை தடைப்பட்டிருக்கிறது என்பதல்ல' என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

# காமினி கொலையில் புலிகள் சம்பந்தம்?

காமினி கொலையில் சம்பந்தப்பட்ட பெண் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று பொலிசார் தெரிவித்திருக்கிறார்கள். பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த பெண்ணை அடையாளம் கண்டு கொண்டதாவும் அவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்றும் இடுப்பில் கட்டிய குண்டு வெடித்ததாலேயே காமினி கொல்லப்பட்டார் என்றும் தெரிவித்தார்.

பிரிட்டனின் ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசார் டி.என்.ஏ பரிசோதனை செய்த பின்னர் இந்த பெண் கணேஸ் புஸ்பமலர் என்ற யாழ்ப்பாணப் பெண் என்று அடையாளம் கண்டுள்ளனர். ஆய்வு கூட சோதனைகளில் இவரது வாயில் சயனைட் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

கடந்த மார்ச் மாதம் கொழும்பு வந்த இவர் கொழும்பில் ரவி என்ற பெயரில் வாழ்ந்து வந்திருக்கிறார். புலிகள் தான் இந்தக் கொலைக்கு காரணம் என்று பரவலாக நம்பப்பட்ட போதிலும் அரச தரப்பில் புலிகளை குற்றம் சாட்டியது இதுவே முதல் தடவையாகும். இதனால் சமீபத்திய யுத்த நிறுத்தம் பற்றி சிக்கல்கள் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்தப் பெண்ணின் கணவர் ஏற்கனவே பிரேமதாச கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருக்கிறார்.

# ஐரோப்பிய சமூகம் நம்பிக்கை தெரிவிப்பு

புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு வழிவகுக்கும் என நம்புவதாக ஐரோப்பிய சமூகம் தெரிவித்திருக்கிறது.

கொழும்பில் உள்ள பிரெஞ்சு தூதுவரகம் ஊடாக விடுத்த அறிக்கையில் யுத்த நிறுத்தத்தை வரவேற்பதாகவும் பேச்சுவார்த்தைகளை வேகமாக முன்னெடுத்து தற்போதைய பிரச்சனைக்கு தீர்வு காண வழி காணப்படும் என நம்புவதாகவும் ஐரோப்பிய சமூகம் தெரிவித்தது. பிரான்சே தற்போது ஐரோப்பிய சமூகத்தின் தலைமையை வகிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மக்களது ஆதரவு கிடைக்கா விட்டால் எந்த ஒரு கொரில்லா இயக்கமும் பல காலங்கள் நின்று பிடிக்க முடியாது

## பிரெஞ்சுப் பத்திரிகைக்கு சந்திரிகா பேட்டி

கொரில்லாக்களுக்கு சமாதானம் தேவையில்லை என்றால், நிலைமையை அவர்கள் மோசமாக்குவதைத் தொடர்ந்தால்.. நான் போர் செய்வேன் என்று சொல்லவில்லை. ஆனால் இராணுவ ரீதியாக தன்னைப் பலப்படுத்திக் கொண்ட உறுதியானதும் நேர்மையானதுமான அரசாங்கத்தினால் போரை வெல்ல முடியும். எங்களுக்கு சமாதானம் தான் தேவை. அது புலிகளுக்கும் தெரியும்.

சர்வதேசப் புகழ் பெற்ற பிரெஞ்சுப் பத்திரிகையான Le Monde யின் உபகண்ட நிருபரான புறாணே பிலிப்பிற்கு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா வழங்கிய பேட்டியின் முழுமையான மொழிபெயர்ப்பு இது. இந்தப் பேட்டி 26.1.95ல் பிரசுரமானது.

*ஜனவரி 8 இலிருந்து போர்நிறுத்தம் அமுலில் இருக்கிறது. ஆனால் பேச்சுவார்த்தைகளோ முறியும் நிலையில் உள்ளன போல தெரிகிறது. யாழ்ப்பாணத்தை நெருக்கும் பொருளாதாரத் தடையையும் குடாநாட்டின கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியுள்ள இராணுவத்தையும் முற்றாக நீக்காமல் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்த புலிகள் மறுக்கின்றனர். பேச்சுவார்த்தை முயற்சிகள் ஓர் போக்கறுத்த நிலையில் உள்ளனவா?*

நாங்கள் அதிசயங்களைச் செய்பவர்கள் அல்ல. பல வருட போரின் பின்னர் விசயங்கள் தமக்குரிய நேரத்தை எடுத்துக் கொள்ளுதல் என்பது சாதாரணமானது. நாங்கள் சிலவற்றில் விட்டுக் கொடுத்தோம். புலிகளிடம் எதையும் கேளாமல் பொருளாதாரத் தடையை ஓரளவுக்கு தளர்த்தியுள்ளோம். இராணுவப் பரிசோதனைகளைக் குறைப்பதற்கும் உடன்பட்டிருக்கிறோம். பூனகரி முகாமை சூழவுள்ள பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மீற்றர்கள் வரை இராணுவம் பின்வாங்குமென்றும் நாம் கூறியிருக்கிறோம்.

*இன்று வரை புலிகளைக் காட்டிலும் சமாதான விசயங்களில் கூடுதலாக உடன்பட்டுப் போவது நீங்கள் என்ற உணர்வு உங்களுக்கு வந்ததுண்டா?*

ஆம். குடாநாடு இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டிருந்ததால் போர் நிறுத்தம் எங்களுக்கும் அவர்களுக்கும் நல்ல விசயமாக இருந்தது. முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் நாம் இரண்டு கப்பல்களில் உணவு, மருந்து வகைகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தோம். புலிகள் தமது பக்கத்திலே நாம் எதையும் கேட்காத போதிலும் ஒரு இருபது கைதிகளை விடுதலை செய்திருந்தனர். கிட்டத்தட்ட அவர்களிடம் இருந்து கிடைத்தது இது தான். பொருளாதாரத் தடையை நீக்குதல், யாழ்ப்பாணத்தை சுற்றியுள்ள முகாம்களை அகற்றுதல், குடாநாட்டு மக்களின் நாளாந்த நெருக்கடிகள்.. இவைகளை புலிகள் எப்போதும் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளாக வைத்துள்ளனர். புனர்நிர்மாணப் பிரச்சனையைத் தொடங்கவும் அவர்கள் தயாராக உள்ளனர். (திருமதி குமாரணதுங்க இது விடயமாக தமிழர் பகுதிகளிற்கு ஒரு பிரதான நிதி உதவியை செய்வதாக வாக்குறுதி வழங்கியுள்ளார்) ஆனால் சமாதான முயற்சிகள் தொடர்பான விசயத்திலே தான் தடைகள் உள்ளன. எமக்கோ பகையுணர்வை அகற்றுதல் மட்டும் அரசியல் பேச்சுவார்த்தைகளை தொடக்குவதற்கான முதல்படியாக படுகின்றது. புலிகளுக்கு இதில் உடன்பாடு இல்லை எனில், இது விசயத்தில் நாங்களும் ஈர்க்கப்பட்டவர்கள் அல்லர். எங்களை எங்கேயோ கூட்டிச் செல்லும் பேச்சுவார்த்தைகள் எங்களுக்குத் தேவையில்லை.

*கூட்டுமுயற்சிகளில் புலிகள் குறைந்த பட்சம் அக்கறை காட்டுபவர்கள் என உங்களுக்குப் படுகிறதா?*

ஒவ்வொரு கட்டப் பேச்சுவார்த்தையின் போதும் அவர்கள் தமது கோரிக்கைப் பட்டியலில் ஏதோ ஒன்றைச் சேர்த்துக் கொள்கின்றனர். உதாரணத்துக்கு இராணுவ முகாம்களை நீக்குவதில் எமக்கு உடன்பாடு இல்லை. இதனை அவர்கள் முதலில் எம்மிடம் கேட்கவில்லை. புலிகள் வளைந்து கொடுக்கும் தன்மை அற்றவர்கள். அரசியல் நெருக்கடிகள் குறிப்பிடத்தக்க தனிப்பட்ட நெருக்கடிகளைக் கொண்டுள்ள போதிலும் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இந்தப் பிரச்சனையை தீர்க்க விளைந்துள்ள எனது அரசுடன் அவர்கள் இப்படி நடந்து கொள்வது நாகரீகமானதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மையிலேயே புலிகளுக்கு சமாதானம் தேவையில்லையா என்பது எமக்குத் தெரியாது. ஆனால் தமிழ் மக்களுக்கு அது தேவையென்பது எங்களுக்குத் தெரியும்.

தமிழ் மக்கள் மத்தியில் உங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆதரவைக் கண்டு புலிகள் கலவரம் கொள்வதில் நியாயங்கள் உண்டா?

ஆம். மக்களது ஆதரவு கிடைக்காவிட்டால் எந்த ஒரு கொரில்லா இயக்கமும் பல காலங்கள் நின்று பிடிக்க முடியாது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளிற்கு முழுமையான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தினால் தமது கட்சி ஆயுதப் போராட்டத்தை விட்டுக் கொடுக்கத் தயார் என்று புலிகளின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார். ஒரு மாநில ஆட்சிக்கு தான் ஆதரவு என்றும் சொல்கிறார். பேச்சுவார்த்தைகளுக்கு ஊடாக அமையும் ஒரு தீர்வு கிடைக்குமாயின், தமிழர்களுக்கு கூடிய அதிகாரங்களைக் கொடுப்பதாக உங்கள் பக்கத்திலே நீங்கள் வாக்குறுதி அளித்துள்ளீர்கள். இந்த இரண்டு நிலைப்பாடுகளும் இணைந்து கொள்ளக் கூடியனவா?

குறிப்பாக இது தொடர்பாகத்தான் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். நிலைமை, அவநம்பிக்கையைத் தரும் ஒன்றல்ல. மாநில ஆட்சியை புலிகள் அங்கீகரிக்க வந்ததே முக்கியமான விடயம் தான்.

ஆனால், குறிப்பாக இந்த சமஷ்டி ஆட்சி என்ற சொல் சிங்களவர்கள் பலருககு பயத்தை ஏற்படுத்துகிறது. இந்த அமைப்பு தேசத்தை பிரிப்பதில் வந்து முடியும் என அவர்கள் அச்சம் கொள்கின்றனர். தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரங்களை கொடுத்தல் என்னும் தங்களது வாக்குறுதி ஒரு மாநில ஆட்சியை முன்மொழிவதையே ஒத்துள்ளது.

நாங்கள் அவர்களுக்கு வழங்கிய அரசியல் தீர்வுப் பிரேரணைகளை மக்கள் முன் வைக்கும் வரை இது தொடர்பாக என்னால் எதையும் சொல்ல முடியாது.

ஓர் சமஷ்டி ஆட்சிக்கு நீங்கள் ஆதரவா?

நான் இந்தப் பதத்தை பாவிக்க விரும்பவில்லை. இதற்கு மாற்று அர்த்தத்தை கொடுக்க நிறையப் பேர் உள்ளனர்.

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து பெரும்பான்மை சிங்களவர்களால் தாம் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்த தமிழ்ச் சிறுபான்மையினரின் கோபத்தில் வெளிப்பாடே இந்தப் போர். இன்றும் கூட இலங்கையில் தமிழர்களாக இருப்போர் முன்னுக்கு வருதல் மிகவும் கஷ்டமானதா?

ஆம், இது ஒருவகையில் உண்மையானதாகத் தான் உள்ளது. தமிழர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றனர். கல்வி ரீதியாக இவர்கள் சமமான வாய்ப்பைக் கொண்டுள்ளனர். ஆனால் அரச

**ஒவ்வொரு கட்டப் பேச்சுவார்த்தையின் போதும் அவர்கள் தமது கோரிக்கைப் பட்டியலில் ஏதோ ஒன்றைச் சேர்த்துக் கொள்கின்றனர். புலிகள் வளைந்து கொடுக்கும் தன்மை அற்றவர்கள்.**

பரிபாலனத்தில் இவர்களது உயர்வு ரீதியான கோரிக்கைகள் உயர்ந்த பதவிகளில் உள்ள சிங்களவர்களால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

சில தமிழர்கள் இலங்கை ஒரு நாடு அல்ல, இரண்டு நாடுகள் எனக் கருதுகின்றனர். ஒன்று சிங்களவர்களது, மற்றது தமிழர்களது...

இலங்கை ஒருவேளை இரண்டு தேசங்களாக இருக்கலாம். ஆனால் ஒரேயொரு நாடு, ஒரேயொரு அரசு.

மிகவும் அண்மையில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சில இராணுவப் பிரமுகர்களது மோசமான போக்கினால் கலவரமடைந்திருந்தீர்கள். இராணுவத்தின் ஆதரவு தங்களுக்கு உண்டா?

இராணுவத்தின் பெரும்பகுதி போர் முடிவுக்கு வரவேண்டும் என்பதையே விரும்புகின்றனர். நான் சொன்னது இதுதான், அதாவது முன்னைய அரசாங்கத்தில் இருந்த சிலர் போரை வைத்து வியாபாரம் நடத்தியுள்ளனர். அரசியல் வாதிகளும் அவர்களது பிள்ளைகளும் ஒருவேளை இராணுவத்தைச் சேர்ந்த சிலரும் இருக்கலாம். எப்படியோ இராணுவம் இன்று (சமாதானச்) செய்தியை புரிந்து விட்டது. இராணுவத்தினர் இன்று அதிக ஒத்துழைப்பு காட்டுகின்றனர். இப்போது நாம் நிலைமையைக் கையில் எடுத்துள்ளோம்.

பேச்சுவார்த்தை தடங்கலில் வந்து யுத்தம் மீளவும் தொடங்குமாயின் உங்களுக்கு இராணுவ நடவடிக்கை மட்டுமே எஞ்சியிருக்கும். இருந்தும் இராணுவமோ புலிகளை அவர்களது நிலத்தில் ஒருபோதுமே வெற்றி கொண்டதில்லை. இத்தகைய சூழலில் யுததம் மீளவும் தொடங்கப்பட்டால் இராணுவ நடவடிக்கையின் வாய்ப்புகள் எதுவாக இருக்கும்?

முன்னாள் அரசாங்கம் யாழ்ப்பாணத்தின் மீது ஒரு தாக்குதலைத் தயாரித்திருந்தது. இதற்காக எழுபது மில்லியன் டொலருக்கு சமமான ஆயுதக் கொள்வனவுக்கும் ஓடர் கொடுத்திருந்தது. நான் ஆட்சிக்கு வந்தவுடனேயே இந்த தாக்குதலுக்கான முயற்சியை நிராகரித்து விட்டேன். கொரில்லாக்களுக்கு சமாதானம் தேவையில்லை என்றால், நிலைமையை அவர்கள் மோசமாக்குவதைத் தொடர்ந்தால். நான் போர் செய்வேன் என்று சொல்லவில்லை. ஆனால் இராணுவ ரீதியாக தன்னைப் பலப்படுத்திக் கொண்ட உறுதியானதும் நேர்மையானதுமான அரசாங்கத்தினால் போரை வெல்ல முடியும். எங்களுக்கு சமாதானம் தான் தேவை. அது புலிகளுக்கும் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யுத்த நிறுத்தத்தை..

ஒருவரை புளொட் சுட்டுக் கொன்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனுல் மன்னுரில் உள்ள புளொட் உறுப்பினர்களின் ஆயுதங்கள் களையப்பட்டிருந்தன. கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் திரிந்து யுத்த நிறுத்தத்தை மீறுவதாக புளொட் குற்றம் சாட்டியிருந்தது. அனுருத்த ரத்வத்தைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ஆயுதம் இன்றி நடமாடும் தங்களின் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு புலிகள் அச்சுறுத்தலாய் உள்ளனர் என்று புளொட் குற்றம் சாட்டியிருந்தது.

யுத்த நிறுத்தத்தை பயன்படுத்தி புலிகள் தங்கள் அரசியல் எதிரிகளை ஒழிக்கக் கூடும் என்று மற்ற அமைப்புகள் கூறியுள்ளன. முன்பு பிரேமதாசா காலத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் போதும் புலிகள் அமிர்தலிங்கம் உட்பட பலரைக் கொன்றிருந்தனர்.

கிழக்கில் கடந்த வாரம் திங்கட்கிழமை ஆயுதத்துடன் இருந்த இரண்டு புலிகளை பொலிசார் கைது செய்த பின்னர் பிரதேசப் பொறுப்பாளர்களுடன் பேசி அவர்களை விடுதலை செய்தனர். பின்னர் அவர்களின் ஆயுதங்களைத் தரும்படி புலிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மூன்று வாரங்களுக்கு மேலாக அமுலில் உள்ள யுத்த நிறுத்தத்தில் புலிகளின் மீறல் குறித்து இராணுவம் அதிருப்தி கொண்டுள்ளது. கிழக்கில் தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் மீண்டும் புலிகள் நடமாட இடமளிக்கப்பட்டிருப்பதாக இராணுவம் கருதுகிறது. யுத்த நிறுத்தத்தை பயன்படுத்தி புலிகள் தாங்கள் இழந்த பகுதிகளில் நடமாடுவதாக இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்திஞல் பின்வாங்கச் செய்யப்பட்ட புலிகள் தற்போது பெருமளவில் கிழக்கிற்கு வந்துள்ளனர். பிரபாகரன் கூட கிழக்கில் இராணுவம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை பேட்டி ஒன்றில் ஏற்றுக் கொண்டிருந்தார். ஆயினும் 'கைப்பற்றுவது சுலபம், ஆனுல் அவர்கள் தாக்குப்பிடிப்பார்களா? அவர்கள் இறுதியில் பின்வாங்க வேண்டி வரும்' என்று கூறியிருந்தார்.

# அகதிகளை நோர்வே திருப்பி அனுப்பும்

நோர்வேயிலிருந்து அகதித் தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். சுமார் 300 தமிழர்களை திருப்பி அனுப்பப் போவதாக நோர்வே கடந்த புதன்கிழமை தெரிவித்திருந்தது. பல வருடங்களாக நோர்வேயில் தங்கியிருக்கும் இவர்கள் தங்களுக்கு நாடு திரும்ப பாதுகாப்பு இல்லை என்று கூறுகின்றனர். இவர்களில் சிலர் அறிவித்தல் கிடைத்ததும் நாடு கடத்தலுக்கு தப்ப தலைமறைவாகி விட்டனர்.

நீதி அமைச்சின் அதிகாரியான மேலண்ட் கூறுகையில் நோர்வேயின் அரச தரப்புக் குழு இலங்கை சென்றதாகவும் அங்கு மனித உரிமை நிலைகள் முன்னேற்றம் கண்டுள்ளதாக அது கண்டறிந்ததாகவும் தெரிவித்தார். நோர்வே போன்றே மற்ற நாடுகளும் இவ்வாறுன முடிவுக்கு வந்ததாகவும் இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தாங்களாகவே திரும்பிச் செல்வதாகவும் சுவீடன், சுவிஸ் என்பன திருப்பி அனுப்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தத்தில் நோர்வேஜிய கண்காணிப்பாளர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நோர்வேயில் வாழும் தமிழர்கள் அச்சமடைந்திருப்பதாக தினசரியான அப்டன் போஸ்ட் தெரிவித்திருக்கிறது. மயிலு சச்சி என்ற அகதி ஒருவரை மேற்கோள் காட்டி தற்போது யுதத நிறுத்தம் நிலவினுலும் அங்கு தமிழர் வாழ்வது பயங்கரமானது என்று அப்பத்திரிகை தெரிவித்தது.

நாடு கடத்தப்படுபவர்களுக்கு தேவைப்படும் பட்சத்தில் பலத்தைப் பிரயோகிக்குமாறு பொலிசாருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

# ஊழல் பற்றி விசாரணை

ஐ.தே.கட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல் குறித்த ஜனுதிபதி ஆணைக்குழு விசாரணைகள் முதலில் எயர்பஸ் கொள்வனவு குறித்து ஆராயும் என்று நீதியமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறுர். உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான இவ்விசாரணைக்குழு ஐந்து எயர்பஸ் விமானங்களை பிரான்சிடம் இருந்து வாங்க எடுத்த முயற்சிகள் பற்றி ஆராயும்.

அத்துடன் கொழும்பு ஹில்டன் நிர்மாணம், பஸ்கள் கொள்வனவு, புகையிரத சேவை, மின்சார சேவை, தொலைதொடர்பு, காணி விற்பனை, குத்தகை, லொத்தர், புடைவைகள் போன்ற விடயங்களில் ஏற்பட்ட ஊழல்கள் உட்பட பதினேழு விடயங்கள் குறித்து ஆராயப்பட உள்ளன.

முறையான விதிமுறைகள் இன்றி கொந்தராத்துக்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அரச சொத்துக்கள் விற்கப்பட்டிருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

# பாக்குநீரிணையில் போதைப் பொருட் கடத்தல்

புலிகள் தங்கள் யுத்தத்திற்காக போதைப்பொருட்களைக் கடத்துகிறுர்கள் என்று இந்திய கரையோரக் காவற்படையின் சிரேட்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். கடந்த வருடம் பாக்குநீரிணைப் பகுதியில் 32 மில்லியன் டொலர் பெறுமதியான போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளதாக இந்திய கரையோரக் காவற்படையின் கிழக்குப் பிரிவு கட்டளை இயக்குனர் ஆச்சார்யா கூறியுள்ளார். 'இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தீவிரவாத அமைப்புகள் ஆயுதங்கள், வெடிமருந்துகள் வாங்க போதைப் பொருளைக் கடத்துவது தெரிந்த விடயம்' என்று அவர் கூறியுள்ளார். தாங்கள் கைப்பற்றியது ஒரு சிறுபகுதி என்றும் தற்போது புலிகளின் போதைப் பொருட் கடத்தல் அதிகரித்துள்ளது என்றும் ஆச்சார்யா மேலும் கூறினுர்.

தற்போது புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் ஆட்களைச் சேர்த்து வருவதாகவும் இந்த போதைப் பொருள் கடத்தல் ஆயுதங்களை வாங்கி மீண்டும் யுத்தத்திற்கு தயார் செய்வதற்காகவே என்று மேற்கு நாட்டு இராணுவ ராஜதந்திரி ஒருவர் கொழும்பில் யுனைட்டட் பிரஸ் நிருபருக்குத் தெரிவித்திருக்கிறுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காலம் சஞ்சிகையின் ஆதரவில்

# வாழும் தமிழ் 1995

## தமிழ் புத்தகங்களின் கண்காட்சி



### சங்க காலம் முதல் கொண்டு இன்று வரை தமிழ்

*தமிழில் தொன்மை, அறிவியல், சமயம், சிறுவர் இலக்கியம், இசை, சினிமா,*
*நவீன இலக்கியம், அரசியல் ஆய்வு, இன்னும் பல துறைகளில்*
*ஆயிரக்கணக்கான புத்தகங்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் உள்ளன.*

தொடர்புகளுக்கு: (416) 412 7168

OISE மண்டபத்தின் இரண்டாம் மாடியில்
252 Bloor St W (St.George Subway)
**Feb 4, 1995**
*காலை 11-மாலை 8 மணி வரை*
பிரவேசம் இலவசம்

*தாயகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஏ.ஆர்.கே மார்க்கட்

★ இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள்,
உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப் பொருட்கள்

## அனைத்தும் மலிவு விலையில்

★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
★ CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

31-35 ST.DENNIS DR
(DON MILLS/EGLINTON)
(416) 421 3429




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெடிமருந்து சதி முயற்சிக்கு அல்ல!

சந்திரிகாவின் இல்லத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிமருந்து எந்த சதித்திட்டத்தின் காரணமாகவும் பதுக்கி வைக்கப்படவில்லை என்று பொலிசார் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டு பாதுகாவலர்களிடம் கைப்பற்றப்பட்ட இந்த வெடிமருந்துகள் பற்றி சி.ஐ.டிக்கள் விசாரணை செய்திருந்தனர். ஒரு ருத்தல் நிறையுள்ள இந்த வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டது குறித்து அந்த காவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி பொலிசார் இராணுவத்தைக் கோரியுள்ளனர். வெடிமருந்தை அனுமதியின்றி வைத்திருந்த குற்றச்சாட்டு இவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

# ராஜீவ் கொலை பற்றி வி.பி.சிங்

பிரசார நேரத்தின் போது ராஜீவ் காந்தியை பாதுகாக்க காங்கிரஸ் முயலவில்லை என்று வி.பி.சிங் குற்றம் சாட்டியிருக்கிறார். ராஜீவிற்கு கொலை மிரட்டல் இருந்த போதும் அவருக்கு பாதுகாப்பு வழங்க சிரேட்ட அதிகாரிகள் மறுத்தார்கள் என்று சாட்சியங்களில் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'மகாத்மா காந்தி முதல் ராஜீவ் வரை காங்கிரஸ் ஆட்சிக்காலங்களில் தான் கொல்லப்பட்டார்கள்' என்று வி.பி.சிங் கூறியிருக்கிறார்.

# முகாமை அகற்றுவதில் இழுபறி

பூனகரி முகாமை அகற்றுவது குறித்த புலிகளின் நிபந்தனை பேச்சு வார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. இரு வருடங்களுக்கு முன்னர் 750க்கும் மேற்பட்ட படையினரை இழந்தும் மீட்கப்பட்ட முகாமை அகற்றுமாறு கேட்பது நியாயமற்றது என்று ஒரு இராணுவ அதிகாரி வெளிநாட்டு நிருபர் ஒருவருக்குத் தெரிவித்திருக்கிறார்.

இராணுவம் முகாமை பொதுமக்கள் பாதையிலிருந்து பின்னோக்கி நகர்த்த முன்வந்த போதும் புலிகள் அதற்கு சம்மதிக்கவில்லை.

'அவர்கள் அதை முழுமையாக அகற்றுமாறு கோருகிறார்கள், அது தந்திரோபாய ரீதியில் சாத்தியமற்றது' என்று சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

ஆனால் பாலசிங்கமோ 'எங்கள் மண்ணில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை அகற்றுவது நம்பிக்கையை ஏற்படுத்த வழிவகுக்கும்' என்கிறார்.

# யாழ்.திரும்பும் தமிழ் மக்கள்

கொழும்புக்கு பாப்பரசரைத் தரிசிக்க வந்த 2500 பேரில் சுமார் இருநூறு பேர் மட்டுமே இதுவரை யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார்கள். இவர்கள் கடந்த வாரங்களில் சிறு குழுக்களாக திரும்பிச் செல்கின்றனர்.

Ontario

## CHAIR, BOARD OF INQUIRY

*(under the Human Rights Code)*

The Government of Ontario is committed to fairness and equity throughout the province. The *Human Rights Code* provides protection from discrimination in areas of employment, services, contracts and accommodation.

As part of the Government's continued commitment to the effective use of resources and enhanced customer service, recent amendments to the *Human Rights Code* provide for the establishment of an independent standing Board of Inquiry to hear and decide matters referred to it under its mandate.

We seek an exceptional leader to chair the Board of Inquiry and to guide the transition to its new status. Candidates must have experience in adjudication and administrative law as well as knowledge of mediation principles and practices. A sound knowledge of equality issues is essential. Knowledge of the *Human Rights Code* and related legislation is necessary.

Sound judgment is critical, as decisions will continue to set the jurisprudence in this complex area of administrative law. Excellent communication, writing skills and decision-making and management skills are required.

This important opportunity will appeal to individuals who have demonstrated a commitment to fairness, social justice, equity and access issues. Appointment is by Order-in-Council for an initial three-year term.

In accordance with our employment equity goals, applications for this full-time position are particularly encouraged from aboriginal peoples, francophones, persons with disabilities, racial minorities and women. Reply in confidence, by February 10, 1995, to: Public Appointments Secretariat, Macdonald Block, Room M2-70, Queen's Park, Toronto, Ontario M7A 1A1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முனி பதில்கள்

☞ ஏன் முனிவரே, அடிக்கடி பதில் சொல்லாமல் மறைந்து போய் விடுகிறீர் என்பதை சொல்லவும்...
முனிதாஸன், ரொறன்ரோ
'நான் ஒரு தரம் சொன்னா நூறு தரம் சொன்னதற்கு சமன்' உஷ்க்.. உஷ்க்.. உஷ்க்.. நன்றி: பாட்ஷா ரஜனிகாந்த்

☞ தலிப்பெரும் தலைவரும் சந்திரிகாவும் பேச நேரடி தொலைபேசி தொடர்பு செய்யப் போகிறார்களாமே...
முனிதாஸன்,
நேரடியாகப் பேசவா?.. சந்திரிகாவுக்குத் தமிழ் தெரிந்தால் பேசலாம் தானே..

☞ தமிழ்ப் பத்திரிகை ஒன்று தட்டெழுத்தாளர்கள் தேவை என்று விளம்பரம் செய்திருக்கிறது. நான் அப்ளை பண்ண உமது ரெகமண்டேஷன் வேண்டும்..
ஜோ, மொன்றியல்
ஊம்.. தட்டெழுத்தாளர்கள் பற்றாக்குறை.. 'தட்டின' எழுத்தாளர்களுக்கு குறைவேயில்லை.

☞ புலிகளும் சிங்கள அரசும் செய்யும் ஒப்பந்தம் கொடுக்கக் கூடிய தீர்வு என்னவாயிருக்கும்?
க.மகேந்திரன், ஸ்காபரோ
ராஜீவ் கொடுக்க நினைத்ததற்கும் அமிர்தலிங்கம் பெற நினைத்ததற்கும் இடையில் எங்கோ இருக்கும்.

☞ பிரபாகரன், ஜெயலலிதா ஆகியோரின் தலைமையைப் பார்க்கும் போது தோன்றுவதென்ன?
க.மகேந்திரன், ஸ்காபரோ
தனது ஒரு புத்தகத்தின் முன்னுரையில் ஜெயகாந்தன் எழுதியிருந்த இரண்டு வரிகள் தான் ஞாபகத்திற்கு வருகின்றன. 'தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் உலகில் வேறு யாருக்குமே இல்லாத சிறப்புகள் உண்டு. அதே போல வேறுயாருக்கும் இல்லாத சில அவலங்களும் உண்டு'.

☞ தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள விடாது ஈழத்தமிழர்களை திருப்பியனுப்பியது சரியா?
செல்வா துரைராஜா, ரொறன்ரோ
திருப்பி அனுப்பிய முறை சரியா, திருப்பி அனுப்பப்பட்டவர்கள் யார் என்று வெறுமனே ஆராய்வதை விட இந்த நிலை ஏன் வந்தது என்று சற்று ஆழமாக யோசித்தால்... பல விடயங்கள் புலப்படும். மற்ற அரசியல் தலைவர்களதும் இயக்கத்தலைவர்களதும் பெருந்தன்மையைப் பயன்படுத்தியே பல இடங்களில் புலிகள் இயக்கம் தன் அரசியல் 'வெற்றி'யை பெற்றிருக்கிறது. (உ-ம் சுந்தரம், சிறி சபாரத்தினம், அமிர்தலிங்கம், பத்மனபா, ராஜீவ் காந்தி..) இப்படி ஒரு நிலையை மேலும் வரவிடக் கூடாது என்று தமிழக மக்களுக்குச் சொல்ல ஜெயலலிதா குழுவினர் மாநாட்டு மேடையை ஒரு பிரசார மேடையாக பாவித்ததாயே கருத வேண்டும். தமிழாராய்ச்சி மாநாட்டில் ஈழத்தவர்கள் அவமானப்படுத்தப்பட்டதாக இங்கே கூக்குரல் இடுபவர்கள் தான் அந்த அவமானம் ஏற்படக் காரணமாயிருந்தவர்களையும் ஆதரிக்கிறார்கள். எல்லாமே அரசியல்தாண்டா.

☞ இலவசமாக வெளிவரப்போவதாக சொன்ன முத்தமிழ்ப் பத்திரிகை ஒன்று திடீரென்று தனது 'பெறுமதியை' அதிகரித்துவிட்டதே..
மு.ஸ்ரீதரன், ஸ்காபரோ
முத்தமிழுக்கு மூன்று இருபத்தைந்து சதம் கொடுங்கோ.. (ஒரு பத்திரிகையை வீழ்த்த என்று அதே பெயரில் பத்திரிகை வெளியிட்ட கேவலம் இங்கு இரண்டாம் முறையாக நடந்திருக்கிறது. இவர்கள் எல்லாம் தமிழுக்கு சேவை செய்கிறார்களாம்.. தூ...)

☞ தமிழக வியாபார சஞ்சிகையான குமுதம் சுஜாதாவின் வருகைக்குப் பின் மாறியிருப்பதை கவனித்தீரா?
மு.ஸ்ரீதரன், ஸ்காபரோ
ஆம்... 'பக்கா' வியாபாரப் பத்திரிகையாயிருந்த குமுதத்திற்கு இப்போது தான் இலக்கியத் தரம் மூலாமாக இடப்பட்டிருக்கிறது. ஜனரஞ்சக எழுத்தையும் தரமான எழுத்தையும் ஏக காலத்தில் கையாளத் தெரிந்த சுஜாதா குமுதத்தை மாற்றிக் கொண்டு வரும் விதம் மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழக நடுத்தர வர்க்கத்தின் மாறி வரும் போக்கிற்கு குமுதம் சரியாக ஈடு கொடுக்குமாயின் அடுத்த நூற்றாண்டு தமிழ் பத்திரிகை உலகில் குமுதம் ஒரு அசைக்க முடியாத ஜனரஞ்சகப் பத்திரிகையாக இருக்கும். அதை குறிக்கோளாக வைத்துத் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தற்போதைய குமுதத்தின் ஒவ்வொரு மாற்றமும் இருக்கிறது.

☞ 6/49 எடுத்து லட்சக்கணக்கில் பரிசு பெறலாம் என்ற கனவில் காசை செலவு செய்யும் தமிழ் மக்களைப் பற்றி..
ஜெயா கணபதிப்பிள்ளை, ரொறன்ரோ

செய்யட்டுமே, உமக்கு என்ன வந்தது? அதிட்டம் இருந்தால் தமிழன் ஒருவன் மில்லியனராக வரட்டுமே. மக்கள் மனம் விரும்பி தாமாகவே அரசுக்கு கட்டும் வரிப்பணம் தானே 6/49.

☞ குடும்பவாழ்க்கையில் ஈடுபட்ட பல ஆண்கள் கனடாவில் மனமுடைந்து போய் வருவது நீர் அறியாததல்ல. எனது நண்பன் ஒருவன் (தாயகம் வாசகன்) தனது மனைவியின் போக்கினால் மிகவும் மனமுடைந்து போயிருக்கிறான். அவனுக்கு ஆறுதல் சொல்லவும்.
செங்கதிரோன், மொன்றியல்

கனடாவில் எமது மக்களின் குடும்ப வாழ்க்கைகளில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு ஒரு பகுதியை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. இந்த ஓசையும் ஒரு கை ஓசையல்ல. (உமது நண்பனுக்கு வேண்டுமானால் நான் என்றோ படித்த ஒன்றை சொல்கிறேன். ஆண்களின் நிம்மதிக்கு பெண்களின் உறவை விட வேறு எதுவுமே தேவையில்லை. ஆனால் பெண்களே இல்லையென்றால் நிம்மதி என்ற தேவையே ஏற்பட்டிருக்காது)

☞ நாகரீகச் சுழலில் சிக்கி அதிவேகத்துடன் மாறி வரும் இங்குள்ள தமிழ் இளைஞர்களின் எதிர்காலம் எப்படிப் போகும்..
செங்கதிரோன், மொன்றியல்

க்வான்டம் பிஸிக்ஸில் ஒரு தியரி உண்டு. ஒரு துணிக்கையின் வேகத்தையும் இருப்பையும் ஏக நேரத்தில் சரியாகக் கணிக்க முடியாது.

☞ இளையராஜா ரகுமானை ஓரங்கட்டுவாரா?
தர்மரத்தினம், ஸ்காபரோ

இந்திப் பாடல்களின் ஆதிக்கம் தமிழுக்கு நுழைந்த காலத்தில், அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் இசையமைத்து ஒரு ஆதிக்கத்தை தடுத்த பெருமை இளையராஜாவுக்கு... தமிழகத்தில் சட்டலைட் தொலைக்காட்சி ஆதிக்கத்தால் ஆங்கில இசை பிரபலமாக ஆரம்பிக்கும் நேரத்தில் அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் இசையமைப்பதன் மூலம் பிரபலமாகி வரும் இசையமைப்பாளர் ரகுமான். வெவ்வேறு கால கட்ட சுதந்திரப் போராளிகளை ஒப்பிடவும் முடியாது. ஒருவர் மற்றவரை ஓரம் கட்டியதாக பெருமைப்படவும் முடியாது. (ரகுமான் இசையை தமிழகத்தவரும் ஐரோப்பிய, வட அமெரிக்க தமிழர்களும் ரசிக்கும் அளவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வரும் சிறுவன் ரசிப்பதில்லை.. கவனித்தீரா?)

☞ சதிலீலாவதி படம் பார்த்தீரா?
சம்பந்தன், மிசிசாகா

பாலு மகேந்திரா, கமல்ஹாசன், கிரேஸி மோகன் மூவருமாகச் சேர்ந்து செய்து முடித்திருக்கும் விசுப் படம். (பாட்ஷா படம் தியேட்டரில் ஓடோ ஓடென்று ஓடுகிறது. ரஜனிகாந்த் நேரே வந்த போது அவரைப் பார்க்க ரொறன்ரோவில் கூடாத கூட்டம் அவரது படத்திற்கு மட்டும் கூடுகிறது கவனித்தீர்களா... இதுதான் தானாகச் சேர்ந்த கூட்டமோ?)

☞ இங்குள்ள எந்தக் கோவிலுக்குப் போனாலும் பக்தி வருகிறதாயில்லையே? ஏன்?
கே.நடராஜா, மொன்றியல்

நீடிய பக்தியில்லாதவர்
கோயில் நெருங்குவதால்
தொல்லையே..
கூடி அக்கோயில்
வேலை செய்வோருக்கும்
கூறும் பக்தி
இல்லையே!

☞ கனடாவில் உள்ள எமது மக்களோடு வாழ மதில் மேல் பூனையாக இருந்தால் போதுமா?
பவனீதரன், மொன்றியல்

மதில் மேல் பச்சோந்தியாக இருந்து பாரும்.. நன்றாகவே இருந்திடுவீர்.

☞ ஈழத்திலே வாழ்வதாலேயே துன்பத்திற்கு ஆளாகும் எமது மக்களைப் பற்றி நீர் வருத்தப்படுவதில்லையே.. அவர்களுக்கு விடிவு கிட்டாதா?
கி.சண்முகானந்தம், ரொறன்ரோ

ஆகுங்கால் அனைத்தும்
ஆகுங்காண் தம்பி..
காடு எரியும் போது
சந்தன மரமும் வேகாதோ?

☞ தாயகத்தில் இடையிடையே ஆபாசத் துணுக்கு இடம் பெறுவதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. இதைப் பற்றி என்ன சொல்கிறீர்?
சிவா கருணா, ரொறன்ரோ

1.தாயகம் வாசகர் சிந்திக்கத் தெரிந்தவர். ஆபாசத்திற்கும் நகைச்சுவைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நன்கு புரிந்து வைத்திருப்பவர். 2. தாயகத்தை வெளியிடுபவர்கள் சமூகப் பிரக்ஞையுள்ளவர்கள். மலிவான இலக்கியத்தில் பணம் சம்பாதிக்கும் நோக்கம் அற்றவர்கள். 3. பொதுவாகவே ஆபாசம் என்று முத்திரை குத்துவது சுலபம். படிப்பவரின் மனப்பக்குவத்தை பொறுத்தே ஆபாசம் அமைகிறது.
(ஒரு 'ஆபாச' ஜோக்; 'இவளைக் கைவிடாது காப்பாற்றுடா' 'கவலைப்படாதே.. கையே விட மாட்டேன்')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீண்டும் வானொலி நிலைய நிர்மாணம்

அமெரிக்க வானொலி நிலைய நிர்மாணம் முன்பு நிறுத்தப்பட்ட பின்னர் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பின்னர் புதிய சமரசம் காணப்பட்டிருக்கிறது. மக்களுக்கு ஒப்பந்தம் பற்றி சரியாக அறிவிக்கப்படாததே இந்த களேபரத்துக்கு காரணம் என்று வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் தெரிவித்திருக்கிறார்.

அங்கிருந்து வெளியேறும் கதிர்வீச்சு அளவிடப்படும் என்றும் இலங்கை அரசினால் ஒழுங்காக சோதனைகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அப்பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமெரிக்கா உதவி செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன் மீனவர்கள் மீன்பிடிப்பதை தடுக்கப் போவதில்லை என்றும் அப்பகுதி மக்களின் சமய ஆசார நிகழ்ச்சிகளுக்கு மதிப்பளிக்கப் போவதாகவும் அமெரிக்க அரசு உறுதியளித்திருக்கிறது

# நடுநிலை வகிக்கும் ஐ.தே.க

தற்போதைய பேச்சுவார்த்தைகளில் தாம் நடுநிலை வகிப்பதாக ஐ.தே.கட்சி தெரிவித்திருக்கிறது. சமாதானத் திற்கு தாம் தடையாக இருக்க மாட்டோம் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தங்களது பேச்சுவார்த்தைகளுடன் இந்த பேச்சுவார்த்தையை ஒப்பிடப் போவதில்லை என்றும் தங்களுக்கு இதுவரை பேச்சுவார்த்தை பற்றி அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

# மாறும் அரசியல் அமைப்பு

புதிய அரசியலமைப்பு மாற்றங்கள் பற்றி அரசு அறிவித்திருக்கிறது. புதிய அமைப்பின்படி ஜனாதிபதி பதவி ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற ஜனநாயகம் நிலைநாட்டப்படும். இந்த தகவலை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டிருக்கிறார்.

புதிய உத்தேச திட்டப்படி பிரதமர் அரசின் தலைவராகவும் ஜனாதிபதி சம்பிரதாய தலைவராகவும் இருப்பர். உத்தேச திட்டத்தின் அதிகாரப் பரவலாக்கம் தவிர்ந்த பல திட்டங்கள் உள்ளன. சுதந்திரமான நீதிநிர்வாகம், சுதந்திரமான பொதுசேவை ஆணைக்குழு என்பன இதில் அடங்கும்.

# பி.பி.சி நிருபர் மீது வழக்கு

திக்வலையில் உள்ள விகாரையில் விவரணத் திரைப்படம் தயாரித்த பி.பி.சி நிருபரும் படப்பிடிப்பாளரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். பி.பி.சி நிருபர் ஜோர்ஜ் ஆர்ணி புத்தரின் சிலையின் மடியில் இருந்து படம் எடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார். நீதிமன்றத்தில் ஆஜராகிய அவர்கள் மன்னிப்புக் கோரியதை அடுத்து வழக்கு வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. இவர்களது மன்னிப்பை விகாராதிபதி ஏற்றுக் கொண்டார்.

Books,
Flyers,
Business Cards,
Wedding Cards

**Blue Line Printing**

கண்ணைக் கவரும் வண்ணங்களில் தரமான அச்சுவேலைகளுக்கு..

**1000**

Flyers $21
Envelopes $35
Business Cards $30
Letterheads $25

Tel:299 5979
Fax:299 8171

335 Nugget Ave, Unit 6
(McGowan/Sheppard)
Scarborough



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

ஒல்கா: அப்படியானுல் அவனது வேலையைப் பூர்த்தியாக்க நீ எங்களுக்கு உதவவேண்டும் (அவனது விழியை நோக்குகின்றாள்) ஹிகோ

ஹிகோ: (மெதுமையாக) ஒல்கா நீ பயப்படவேண்டாம். நான் உன்னைக் நோகடிக்க மாட்டேன். நீ அமைதியாக இரு. ஒரு நிமிஷம் எனது மன எண்ணங்களை சீர் செய்ய அவகாசம் தா. நல்லது நான் சரிசெய்யப்படக்கூடியவன். ஆனுல் தனிமையாக, நிர்வாணமாக, பெட்டி படுக்கை இல்லாமல் எனக்கு நிமோனியோ நோய் வந்தால் எனது நிறத்தைக் கூட மாற்றலாம். நோய் வந்தால் எனது நிறத்தைக் கூட மாற்றலாம் அது என்னை மேலும் மாற்றிச் சரி செய்யும். தான் செய்த காரியத்தை அந்தக் கொலையை இப்ப சரி செய்ய முடியாது. என்ன? அக்கொலை ஓர் முக்கியத்துவம். அந்தத் தவறு அதனை சிகரட் புகைத்தூள் கிண்ணத்தினுள் போட்டு விடலாம். நான் இப்ப எனது பெயரை, ஜூலியன் சோரல் அல்லது றெஸ்ரினுக் அல்லது மிஸ்கின் என மாற்றிக் கொள்ளலாம் அப்ப நான் பென்ரகன் ஆட்களோடு தோளோடு தோள் நின்று வேலை செய்யலாம்.

ஒல்கா: நான் போகின்றேன்.

ஹிகோ: அமைதி ஒல்கா. ஒரு சொல்லும் சொல்ல வேண்டாம் என நான் உன்னைக் கெஞ்சிக் கேட்கின்றேன் (அவன் ஒரு கணம் சிந்தனை செய்கின்றான்) எனது முடிவு இல்லை என்பதே.

ஒல்கா: என்ன முடிவு?

ஹிகோ: எனது முடிவு இல்லை என்பதே, என்னால் உங்களுடன் வேலை செய்ய முடியாது

ஒல்கா: உனக்கு விஷயம் விளங்கவில்லை. ஹிகோ இப்ப அவர்கள் ரிவோல்வருடன் வருவார்கள்.

ஹிகோ: நான் அதை நன்கு புரிந்துகொண்டேன். அவர்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள்.

ஒல்கா: அவர்கள் உன்னை நாய் மாதிரி சுடுவதை நீ விடப்போவதில்லை. நீ அர்த்தமற்ற ஓர் மரணத்தைத் தழுவ முடியாது நாங்கள் உன்னில் நம்பிக்கை வைக்கின்றோம். ஹிகோ நீ ஓர் சிறந்த தோழன் என எங்களுக்குப் நிருபித்து விட்டாய் அது எப்போதும் இருக்கும் (ஓர் கார் சத்தம் கேட்கிறது)

ஹிகோ: அவர்கள் வந்துவிட்டார்கள்

ஒல்கா: ஹிகோ அது குற்றம். எங்கள் கட்சி

ஹிகோ: பெரிய சொற்களை வீச வேண்டாம் இந்த கதையில் ஏற்கனவே பெரிய சொற்கள் நிறைந்து விட்டன. அவை உங்களை மிகப் பாதித்தும் விட்டன. (அந்த கார் வீட்டைக் கடந்து செல்கின்றது) அது அவர்களுடைய கார் இல்லை. அதை நான் உனக்கு விளங்கப் படுத்த நேரம் இருக்கின்றது. நான் சொல்வதைக்கேள் நான் ஏன் ஹெடேடரைக் கொன்றேன் என எனக்குத் தெரியாது. ஆனுல் அவனை நான் கொன்றது சரி என எனக்கும் தெரியும். ஏனெனில் அவனது கொள்கை பிழையானது ஏனெனில் அவன் தோழர்களுக்குப் பொய் சொல்லி கட்சியைத் தொலைக்கப் பார்த்தான். அவனை நான் முதன் ஆபீஸில் வைத்துக் கொண்டிருந்தால் அவன் இக்காரணங்களுக்காகவே இறந்திருப்பான், அது பற்றி எனக்கு வெட்கமும் ஏற்பட்டிருக்கத் தேவையில்லை ஆனுல் அப்போது கொல்லாமல் பின்பு கொன்றதைப் பற்றி வெட்கப் படுகிறேன் இப்ப நீ அதன் பெருமையை களைத்து அவனை அர்த்தமில்லாது கொன்றதாக ஏற்கச் சொல்கின்ருய். நான் ஹெடேடரின் கொள்கையை இப்பவும் சிந்திப்பது உண்டு. நான் சிறையில் இருக்கும் போது நீ எனது கருத்துடன் இணைந்து நின்றாய் என நான் நினைத்தேன். அதுவே எனது சிறை வாழ்வை கொண்டிழுக்க வழி செய்தது. ஆனுல் எனது கருத்து இப்போது தனிமைப்படுத்தப்பட்டு, என்னால் மட்டுமே நம்பப்படுகின்றது என்பதைப் புரிந்து கொண்டேன், ஆனுல் நான் மாறப்போவதில்லை (கார் வரும் சத்தம்)

ஒல்கா: அவர்கள் வந்து விட்டார்கள் நான் சொல்வதைக் கேள் என்ஞல் முடியாது. இந்தத் துவக்கை எடுத்துக் கொண்டு எனது பெட்ரூம் யன்னலால் தப்பி ஓடு.

ஹிகோ: (துவக்கை எடுக்காமல் ) நீங்கள் ஹடேடரை ஓர் பெரிய மனிதனாக்கி விட்டீர்கள் ஆனுல் உங்கள் அனைவரையும் விட நான் அவனை மிகவும் நேசித்தேன். நான் செய்ததை எனது நிலைப்பாட்டை மறுத்தால் ஹொடேடர் கட்சியால் தூக்கியெறியப்பட்ட ஓர் பெயரற்ற பிணமாகி இருப்பான் (காரை நிறுத்தும் சத்தம் கேட்கின்றது)

ஒல்கா: இங்கிருந்து போய்விடு.

ஹிகோ: ஹெடேடரைப் போன்ற மனிதன் வெறுமனே விபத்தால் இறப்பதில்லை அவன் தனது கருத்துக்களுக்காக இறப்பவன், தனது அரசியல் திட்டங்களுக்காக இறந்தவன். அவன் இறந்ததற்கு இறந்ததற்கு அவனே பொறுப்பு. நான்தான் ராஸ்காலினிக்கோவ் என வெளிப்படுத்தி எனது கொலையை உரிமை கோரினால், ஹெடேடர் தனது சாவுக்கான சரியான நியாயத்தை பெறுவான். அதற்காக நான் எந்த விலையைக் கொடுத்தாலும் சரி (கதவில் தட்டும் சத்தம்)

ஒல்கா: ஹிகோ நான்

ஹிகோ: (கதவை நோக்கி நடந்தபடி) நான் ஹெடேடரை இன்னும் கொல்லவில்லை ஒல்கா. இன்னும் முடிக்கவில்லை. ஆனால் அவனை நான் இப்போது கொல்லப்போகின்றேன். அத்தோடு எனது வாழ்வும் முடிவுபெறும்

ஒல்கா: போ, வெளியே போ, (அவன் கத்துகின்றாள்)

ஹிகோ: மாற்றப்படமுடியாதவன் (ஹிகோ கத்துகின்றான்)

முற்றும்

**தமிழில்: நேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சோதிடம் சாக்கடை அல்ல சாக்கடைகள்தான் இன்று சோதிடம்

## சிவப்பிரகாசம்

அண்மையில் பத்திரிகை ஒன்றில் சோதிடம் சம்பந்தமாக கணபதிப்பிள்ளையால் சில கேள்விகள் எழுப்பப்பட்டன. அதை எத்தனை பேர் படித்தார்கள் என்பதோ, அந்தக் கேள்விகள் தேவைதானோ என்பதோ இப்போதுள்ள பிரச்சனை அல்ல. அவற்றினையும் அதன் பின்புலத்தையும் சற்று அலசுவோம்.

'யோவ், சிவப்பிரகாசம்! அது உம்மைக் கேட்கேல்லை காணும். நீர் பதில் எழுதினா உமக்கு ஐந்து செட் அல்ல இருபத்தைந்து செட் கேள்வியிருக்கு. கவனம்'. ஆமா அதுவும் சரிதான். நாம் ஏன் பதில் எழுத வேண்டும்? என்னையா விளையாடுறீங்க. நீங்க ஒருதருக்கு ஒருதர் கேள்வி கேட்கிறதையும் பதில் சொல்லுறதையும் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும். அதுவும் பப்ளிக்கிலை உங்களுடைய வசதிக்காக சோதிடத்தின் ... திறந்து காட்டிக் கொண்டால் ..... நாம் வாய் திறக்கக் கூடாதோ? சோதிடம் உங்க குடும்பச் சொத்தாக எப்போது உயில் எழுதப்பட்டதுங்க. உங்களுக்குள்ளை மட்டும் உள்ள சமாச்சாரம் என்றால் எதுக்கையா பத்திரிகையிலை எழுதுறீங்க.

மக்கள் எவ்வளவு தூரம் முட்டாளாக இருக்கிறார்கள் என்று நாடி பிடித்துப் பார்க்கவா? 'முன்றையும் நாலையும் கூட்டினால் பத்து என்று' ஒருவர் சொல்லுவார். மற்றவர் சொல்லுவர் 'அது பிழை மூன்றையும் நாலையும் கூட்டினால் ஐந்து' என்று. அதற்கு முதல் சொன்னவர் மறுப்புத் தெரிவிக்காவிடில் பின்பு கூறப்பட்ட கருத்து உண்மையாகி விடுமாம். ஆனால் இரண்டு பேர் சொன்னதும் பிழை என்பதைச் சுட்டிக்காட்டி 'மூன்றையும் நாலையும் கூட்டினால் முப்பத்துநாலு என்று நாமும் கூறிவைப்போமே.

இப்படியே ஒருவர் பின் ஒருவர் மறுப்புத் தெரிவிக்க கடைசியாக பத்திரிகையில் வெளிவரும் விஷயம் ஒவ்வொரு முறையும் சரி என்று முடிவு சொல்லப்படும். அந்த மாதிரியாக வாசகர்களை ஆக்கி வைத்திருக்கிறார்கள்: ஆக்கிவைத்திருக்கிறோம்? ஆனால் இந்தக் கணபதிப்பிள்ளை உண்மையிலே பெரிய புத்திசாலி. மக்களை எவன் முட்டாளாக்குகின்றானோ அவனைப் புத்திசாலி என்றுதான் கூறவேண்டும். சிவப்பிரகாசத்தின் பெரியப்பாதான் கணபதிப்பிள்ளை என்றும் சிவப்பிரகாசம்தான் கணபதிப்பிள்ளை என்ற பெயரில் எழுதுவதாயும் 'நிஜக் கணபதிப்பிள்ளை' (அல்லது அவ்வாறு கருதப்படுபவர்) ஒரு கதையைக் கட்டிவிட, அது என் காதில் விழ, அப்படி ஒரு பெரியப்பா எனக்கு இருக்கிறாரா (ஒருவேளை திரைப்படங்களில் வருவது போல இளமையிலே காணாமல் போய் ....) என்று பூரித்துப்போய் 'பெரியப்பா பெரியப்பா' என்று கூவிக்கொண்டு ஆவலுடன் ஓடினால் அப்போதுதான் தெரிந்தது நான் நின்றது சாக்கடைக்குள். ஆனால் சந்தணம் மணத்தது போல அல்லவா இருந்தது.

ஒகோ... இங்கே சில ......... ஓமம் வளர்த்துச் சாம்பிராணி காட்டிக்கொண்டிருந்தார்கள். சாக்கடைக்குள் இவர்களுக்கு என்ன வேலை? நானே எனக்குள் சமாதானம் செய்து கொள்ள வேண்டிதாயிற்று. 'தங்கம் கிடைக்கும் என்றால்.... சாக்கடைக்கு என்ன நரகத்துக்கே போய் வருவதில் என்ன தப்பு'. தோண்டுங்க ஐயா. எங்கே வேண்டுமானாலும் தோண்டுங்க. ஆனால் ... அதற்காக .... மற்றவர்கள் பார்வையை எங்கோ திசை திருப்புவதற்காக ...... அந்தப் பாதையால் போறவர்கள் மீது, முன்னால் சிரித்துவிட்டு பின்னால் அசிங்கத்தைத் துப்பினால் .... இது என்னங்க நியாயம். மனச் சாட்சி இருந்தால் ...

அட அவர்கள் எல்லாம் வாழ்க்கையிலேயே கேள்விப்படாத விஷயத்தைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறேனே. கணபதி யாருடைய பிள்ளையானால் நமக்கென்ன? ........ (சுயதணிக்கை)....... அல்லது ..... (சுயதணிக்கை) திரு அவதாரம் செய்தவனோ? பொதுமக்களுக்காக சரியானதைத் தரவேண்டும் என்று கணக்கில் சரிபிழை பார்க்கிறார்களாம் ...

சரி நம்ம கருத்தையும் சொல்லவோமே. தனிப்பட்ட கலண்டர், பஞ்சாங்க பிரச்சனைகளை கௌசிகரும் கணபதிபிள்ளையும் தீர்த்துக் கொள்ளட்டும். ஆனால் யதார்த்தத்தைச் சொல்ல வேண்டுமாயின் பொதுமக்களுக்கு உண்மையில் எந்தக் கணக்கு சரி என்று அறிய ஆவல் இல்லை. யாரையாவது ... யாராவது கடிப்பதைப் காணுவதில் ஒரு இன்பம் சாதாரண மக்களுக்கு வருவதில் வியப்பும் இல்லை.

அதே போல இன்றைய காலத்தில் கலண்டர், பஞ்சாங்கம் கணிப்பவர்களுக்கும் சரியானது எது என்று காண்பதிலேயோ அதை ஆராய்வதிலேயோ உண்மையில் அக்கறையில்லை. முக்கியமான விஷயம் துட்டு .... துட்டு எங்கே விழுகிறதோ அங்கே துணியை விரிக்க வேண்டியதுதான். பத்திரிகைக்காரருக்கும் சூடாக அல்லது கிக்காக விஷயம் தேவை. தாயகம் ஆசிரியரும் அதற்காகத்தானோ நான் எழுதும் இதையும் பிரசுரிக்கிறார்? என்னைப் போன்று சோதிடம் எழுதிக் கொள்பவர்களும், 'எமக்கும் விஷயம் தெரியும்' என்று டம்பம் அடிக்கவோ அல்லது வியாபார விளம்பரத்துக்காகவோ அல்லது இளம் பெண்கள் மத்தியில் பெயர் அடிபட வேண்டும் என்றோ (இந்தக்காலத்தில் எந்த இளம்பெண் ஐயா சோதிடம் படிக்கிறா?) எழுதித்தள்ளிக் கொள்கிறோம். ஏதோ எழுதிவிட்டோமே என்று பரமதிருப்தி.

'இந்தச் சமுதாயத்தை முன்னேறவிடாமல் அடிமுட்டாளாக்க வேண்டும் என்று எத்தனை பேர் வெளிக்கிட்டிருக்கிறீங்க. சமூகத்துக்கு அல்லது தமிழுக்கு ஏதாவது ஒன்றும் செய்ய வேண்டாம். பாவம் எழுந்திருக்க முயலும் மக்களைப் பாமரர்களாகாதீர்கள்.' என்று பல வாசகர்கள் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அறிவுக்கலையாக இருந்து தொழிற்கலையாகத் தேய்ந்த சோதிடத்தை மீண்டும் அறிவுக்கலை ஆக்கவே என்னால் முடிந்ததைச் செய்ய நினைக்கிறேன். அறிவுக்கலை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கோணத்தில் சோதிடத்தை அணுகுவது சிலவேளை முன்னேற்றத்துக்கும் வழி சமைக்கலாம். உதாரணமாக, தற்போது டி.என்.ஏ. (DNA) சோதனை பற்றி பல இடங்களில் கேள்விப்படுகிறோம். ஒருவருடைய டி.என்.ஏ.யை வைத்து அவருடைய உடல்சம்பந்தப்பட்ட முன்னர் நடந்த, பின்னர் நடக்கப்போகும் விஷயங்களைக் கூறக்கூடியதாக அமையலாம் என்ற கருத்து விஞ்ஞானத்தில் உலவ ஆரம்பித்துவிட்டது.. கைரேகை போன்று ஒரே டி.என்.ஏ. உடையவர்கள் இல்லை என்ற வாதம் சரிதானா? ஏன் முடியாது. கைரேகை அமைப்புக்கும், டி.என.ஏ. அமைப்புக்கும், பிறந்த நேரத்துக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? அவை பற்றிய பல புள்ளி விபரங்கள் கொண்டு புதிய ஆய்வுகளைத் தொடரலாம். அது பிரயோசனமாயும் அமையலாம். இனி கணபதிப்பிள்ளை அவர்கள் சோதிட விஷயத்தில் களைந்த துகில்களைப் பார்ப்போம்.

மெய்கண்டானுக்கும் கௌசிகர் கலண்டருக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைத் தெரிவித்தார். உண்மை. எத்தனை சூரியன் ? எத்தனை சந்திரன்? இன்னும் சில ஒப்பீடுகளை நோக்க வேண்டும். அப்படி ஒரு பட்டியலை இங்கு எழுத இடம் காணாது. அதை வாசகர்களும் கணபதிப்பிள்ளை அவர்களும் செய்து பார்க்கவும். இலங்கை வாக்கிய பஞ்சாங்கத்தையும். இந்திய வாக்கிய பஞ்சாங்கங்கள் பல வற்றையும், இந்தியாவில் வெளிவரும் கலண்டர்கள், பஞ்சாங்கங்கள் அனைத்தையும், கனடாவில் உள்ள பஞ்சாங்கங்கள் கலண்டர்கள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட நாளுக்கு இடங்களுக்கேற்ற நேரவித்தியாசங்களைச் சரிசெய்துவிட்டு ஒப்பிடுங்கள் எப்போதாவது ஏதாவது ஒற்றுமை (ஒரே கணிதர் செய்து கொடுத்த இடங்களைவிட) உண்டா? ஐயாமார்களே அது எப்படின்னு கேட்கிறேன்? ஓராயிரம் சூரிய சந்திரர்களோ? ஒருவேளை ஒவ்வொருவரும் வெவ்வேறு சூரிய மண்டல கணக்கை வைத்திருக்கிறார்களோ? அதைப்பற்றி எப்போதாவது யாராவது நினைத்திருக்கிறார்களா? நினைத்திருக்கின்றீர்களா? இதில் ஒரு உடன்பாட்டை ஒரு சிலராவது வைத்திருக்க விரும்பாத காரணம் என்ன? அதுவும் இந்தத் துறையில் உள்ள பலரும் அந்தணர் என்ற அறவோராம்.

ஆக.... தொழில் சுத்தமாக போட்டியின்றி நடக்க வேண்டும் என்பதற்காக, மக்களுக்குச் சேவை செய்கின்றோம் என்ற மருட்சியை உருவாக்கி ..... பலே இதுதான் இந்து தர்மம்! கனடாவில் இதுவரை வெளிவந்த ....... (சுயதணிக்கை) அதற்கு விதிக்கல்ல. அதைப்பற்றி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். முறையை மாற்றும் போது முன்பு எழுதிய சாதகங்கள் யாவும் பிழையாய் போய்விடும் என்று கவலைப்பட்டிருக்கிறார் திரு கணபதிப்பிள்ளை.

சூரிய உதயக்கணக்கில் காலடி அளவீட்டில் இருந்து தற்காலக் கணிப்புக்கு மாற்றிய போது எத்தனை பேரின் சாதகங்கள் மாற்ற வேண்டி வந்திருக்கும். உபகிரக - இராகுகால விஷயங்களுக்கும் பிற விஷயங்களுக்கும் முப்பது நாழிகையில் இருந்து அகசுக்கு மாற்றியபோது எத்தனை சாதகங்கள்(குளிகாதி விபரம்) மாற்றியிருக்க வேண்டும். சர கண்ட முறையில் பெறப்பட்ட நிராயன இராசிப்பிரமாணங்களில் இருந்து. தற்போது பாவிக்கப்படும் 'சாயன நிராயன' முறைக்கு மாற்றப்பட்ட போது எத்தனை சாதகங்கள் மாற்ற வேண்டியிருந்திருக்கும். ஆனால் இந்த மாற்றங்கள் செய்யப்பட்ட போது சரியான திருப்பங்கள் என்ற முறையில் முன்னர் எழுதப்பட்ட ஜாதகங்கள் பற்றி மாற்றியவர்கள் நினைக்க வில்லை. வேதகாலத்திலே இருந்த அபிஜித் நட்சத்திரம் பின்னர் கைவிடப்பட்டபோது, அன்று சோதிடக் கணிப்புகளைத் தந்த கணிதர்கள் சாதகம் மாறப் போகின்றதே என்று கவலைப்படவில்லை. ஆரியப்பட்டர் எழுதி வைத்த சித்தாந்தத்துக்கு அவரின் சீட பரம்பரை திருத்தம் எழுதியபோது முன்னர் எழுதிய சாதகங்கள் பிழையாகிவிடப் போகிறதே என்று நினைக்கவில்லை. ஒன்றரை வருடங்களாக அறியாமல் பஞ்சாங்கத்தில் ஏற்பட்ட 'இராகு-கேது' மாற்றங்களை அதை அறிந்ததும் வெளிப்படுத்திய இரகுநாதையர் அந்த ஆண்டுகளுக்குள் எழுதப்பட்ட சாதகங்கள் சிலவற்றில் மாறுதல் ஏற்படப் போகிறதே என்று கவலைப்படவில்லை. சரியானது வரவேண்டும் என்பதை நினைத்தார்கள்.

கௌசிகரின் கணிப்புச் சரியா பிழையா என்பது இப்போது எடுக்கப்பட்ட விவாதம் அல்ல. கௌசிகர் கணிப்பு விஷயத்தில் கொண்ட அணுகுமுறை சர்ச்சைக்குரியது. முறையில் தவறுகள் ஏற்பட்டதை அறிந்தால் அதை மாற்றுவது அறிவுள்ளவர்கள் செயல். 'எட நம்ம முன்னோர்கள் சொன்னதாயிற்றே .... மாற்றக்கூடாது ' என்றால் ..... வீக்கெண்டில் கலியாணத்தை வைக்கலாம் என்று எந்த முனிவன் ஐயா சொல்லி வைச்சான். வசதிக்கு ஏற்ப பிளேட்டைத் திருப்புவதுதான் இந்து மதம் கற்பிப்பதோ?" சனங்களின் நம்பிக்கையைப் பயன்படுத்தி, அவர்களையே முட்டாள்களாக்கி வைத்திருப்பது எப்போதுமே சரிவராதுங்க சார். மக்கள் எந்த விஷயத்திலும் விளிப்புணர்வுடன் நடக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்!. பலவிதமான கருத்துக்களும் கணிப்புக்களும் உள்ள போது எது சரி என்று அறிவதற்கு ஒரே வழி எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பரீட்சிக்க வேண்டியதுதான். ஆனால் இந்தக் கணிப்புகளைச் செய்யும் அந்தணர்கள் தாம் எப்படிக் கணித்துக் கொள்கின்றார்கள் என்று வெளியில் சொல்ல மாட்டார்கள். இவை எல்லாவற்றையும் வெளியில் சொன்னால் சித்திக்காதாம். அடி சக்கை. 'நாம் எல்லோரும் பகுத்தறிவில்லாத பாமரர்கள் . முட்டாள் ஜனங்கள்' என்பது அவர்களுக்கு எப்படி விளங்கியது?

எல்லோருமே சோதிடத்தை விஞ்ஞானமாக ஆய்வு செய்யும் முகமாக அவற்றை விஞ்ஞான முறைகளுக்கு மாற்றி பகிரங்கப்படுத்துவோமா என்று பஞ்சாங்க கணிதர்களைக் கேட்டால் 'இது புனிதமான விஷயம் விஞ்ஞானத்துக்குள் போட்டு அசிங்கப்படுத்தக்கூடாது' என்றனர். விஞ்ஞானம் என்பது 'அசைவம்' என்பது அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. அதே கேள்வியைச் சில சோதிடர்களைக் கேட்டேன். 'சோதிடத்தை விஞ்ஞானம் ஆக்கவே முடியாது. அருள்வாக்கு (வாலாயம்) இருந்தால்தான் அது சித்திக்கும்' என்றனர். அடேயப்பா! இந்தச் சோதிடர்களுக்கு எல்லாம் அருள்வாக்கு சொல்வது எல்லாம் சித்திக்கிறதாம். அருள்வாக்கு இருந்தால் அப்புறம் ஏனையா சாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்வது போல் நடிக்கிறீங்க. அருள்வாக்காலேயே எல்லாவற்றையும் அள்ளிவிடலாமே! அலசுவதானால் என்ன - 'அலம்புவதானால்' என்ன இரண்டு பக்கத்துக்குள்தான் என்பது தாயகக் கட்டுப்பாடு. எனவே... இது போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதிராஜாவின் கிராமங்கள்

## யமுனா ராஜேந்திரன்

தமிழ் வெகுஜன சினிமாவில் ஸ்ரீதர், பீம்சிங், பாலசந்தர், மணிவண்ணன், மகேந்திரன், பாலுமேகேந்திரன், பாக்கியராஜ், பாரதிராஜா, மணிரத்தினம் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

இதுவன்றி ஜெயகாந்தன், ருத்திரய்யா, பிரிதர்ராஜன், கோமல் சுவாமிநாதன், அருண்மொழி, ஹரிஹரன் போன்றவர்கள் தீவிர சினிமா சார்ந்தவர்கள்.

எஸ்.பி.முத்துராமன், கே.எஸ்.ரவிகுமார், இராம நாராயணன், பாண்டியராஜன், போன்றவர்களும் சினிமா எடுக்கத் தெரிந்தவர்கள் என குறிப்பிட்டுக் கொள்ளலாம். சினிமாவை தீவிரமான சமூக கலாச்சார, அக்கறையுள்ள சாதனமாகப் பார்க்கிறவறன் சாதரரணமான இம்மாதிரி வறையறுப்புக்கு வர இயலும்.

நான் வெகுஜன சினிமா சார்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவர்கள் வெவ்வேறு கால கட்டங்களில் சினிமா சார்ந்த சிந்தனைகளை தத்தமது அளவில் புதிய மொழியைக் கையாள முயன்றவர்கள் எனக் கொள்ளலாம்.

இவர்கள் எடுத்த படங்களை ஒருசேர பார்க்க முயலுகிறவர்கள் இவர்களது தனிக் குணங்களை அவதானிக்கலாம்.

ஸ்ரீதர் மத்தியவர்க்க ஆண் பெண் அக உலகத்தையும் பாலசந்தர் மத்ய வர்க்க பிற உலகத்தையும் பாக்கியராஜ் மத்திய வர்க்க பாலியல் புறக்கணிப்புகளையும் கொடுக்கிறுர்கள் என்கிற அணுகுமுறையின்படி பிறரையும் பார்க்க முடியும்.

இப்போதைக்கு நாம் பாரதிராஜாவின் தனிக்குணங்களை மட்டும் அவதானிக்க முயல்வோம்.

பாரதிராஜா பதினுறு வயதினிலே படம் மூலம் தமிழ் சினிமாவில் நுழைந்தவர். கிராமிய மனிதர்க்கும் நகர மாந்தர்க்கும் இடையிலான பிரச்சினையை கிராமிய மனிதர்களின் அழுத்தமான மானுட நேய உணர்வை உக்ரத்துடன் சொன்னது அப்படம்.

பாரதிராஜா எடுத்த படங்கள் முதலில் ஞாபகப்படுத்திக் கொள்வோம்.

இவற்றை இருவகையில் வரிசைப்படுத்துவதும் நன்று.

1. கிராமம் சார்ந்த படங்கள்

2. பிற படங்கள்

கிராமம் சார்ந்த படங்கள்

1. பதினுறு வயதினிலே 2. என்னுயிர்த் தோழன், 3. கிழக்குச் சீமையிலே 4. புது நாத்து புது நெல்லு. 5. அலைகள் ஓய்வதில்லை. 6. நாடோடித் தென்றல் 7. கருத்தம்மா 8. முதல் மரியாதை 9. புதிய வார்ப்புகள்.

பிற படங்கள் என 1.டிக் டிக் டிக் 2. கேப்டன் மகள் 3. புதுமைப்பெண் 4. கடலோரக் கவிதைகள் 5, காதல் காவியம் 6, வேதம் புதிது. 7. நிறம் மாறாத பூக்கள் 8. சிகப்பு ரோஜாக்கள் 9. கொடி பறக்குது.

இப்படங்களில் வெள்ளி விழாப் படங்கள், நூறு நாள் கண்டவைகள் என்கிற வெற்றிகரமான படங்களுக்கப்பால் முக்கியமான படங்கள் என்று நான் கருதுபவை இவைகள் தான்.

1. பதினுறு வயதினிலே 2. என்னுயிர்த் தோழன்
3. கிழக்கு சீமையிலே 4. கருத்தம்மா
போன்ற கிராமம் சார்ந்த படங்கள்
1. வேதம் புதிது 2. காதல் ஓவியம்
போன்ற பிற பிரச்சனைப் படங்கள்

நான் குறிப்பிட்ட இந்த 6 படங்களைத் தவிரவுமான மிகுதிப் படங்களில் சினிமா மொழிசார்ந்த பிரக்ஞையுள்ள படங்களும் உண்டு.

நாடோடித் தென்றல் படத்திலுள்ள காலம் பற்றிய உணர்வு, டிக் டிக் டிக் படத்தின் வேகமான Editing போன்ற விசயங்களைச் சொல்லலாம்.

நான் இங்கு பேச விரும்பும் படங்கள் அவரது கிராமம் பற்றிய படங்கள் என்பதால் பிற படங்களான காதல் ஓவியம், வேதம் புதிதை ஏன் முக்கியமான படங்களாகக் கருதுகிறேன் என்பதை மட்டும் சொல்லி விட்டு மேலே செல்கிறேன்.

வேதம் புதிது அதனுடைய கதை சொல்லல் முறைக்காகவும், வேதம் குறித்த விவரமாக கதை ஆழமான தளங்களுக்கும் செல்வதாலும், மதம் பற்றின வெறியுணர்வு சார்ந்த வன்முறையை அற்புதமாகச் சித்தரித்ததாலும், நடிகர்கள் பாத்திரங்களுக்கிடையான வித்யாசம் அழிந்து பட்டதாலும் கதைக்களக்கத்தோடு இணைந்த அதன் மொழிக்காகவும் அதை நல்ல படம் என்று காண்கிறேன்.

காதல் ஓவியம் இசை நடனம் எளிமை இவைகளை இணைக்கும் இழப்புத்தன்மையைக் குறியீடாக்கும் கண்ணிழந்த கலைஞன், கையறுநிலையிலுள்ள பெண் இவர்களுக்கிடையிலான புறநிலை கடந்த இணைவு பற்றிப் பேசுகிறது இப்படம். இரண்டு அருவ நிலைகளான இசை நடனம் பற்றி, வாழ்வின் இரண்டு நிலைகளான இழப்பு, கையறுநிலை பற்றிப் பேசுவதால் அப்படம் எனக்கு முக்கியமாகிறது.

கிராமங்கள் பற்றின சித்தரிப்பென்பது இலக்கியத்திலும் சரி, பிற ஊடகங்களிலும் சரி, சினிமாவிலும் சரி, நகரம் சார்ந்த மத்யதரவர்க்க மனிதனின் எள்ளல், வேடிக்கை பார்க்கும் உணர்வு போன்றவற்றின் அடிப்படையிலேயே சொல்லப்பட்டிருக்கின்றது.

கி.ராஜநாராயணனின் ஆரம்பகாலப் படைப்புக்களுக்கும் பிற்காலத்திய படைப்புக்களுக்கும் இடையில் இத்தகைய முரண்பாட்டை விமர்சகர்கள் காண்கிறுர்கள்.

இதே வகையிலான காட்சிப் பொருளாக கிராமத்தை முன்நிறுத்தும் தன்மையும் நகைச்சுவைக்குரியதாக அம்மனிதர்களின் நடவடிக்கைகளைக் காண்பதும் பாரதிராஜாவின் படங்களிலும் நிகழ்கிறது. வந்த பதினாறு வயதினிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிராமத்திலிருந்து பாரதிராஜா பிற்காலத்திய படங்களின் சென்னை வாழ் மேட்டுக்குடி மனிதராகத் தன்னைக் கண்டு பிடித்துக் கொண்டார்.

பாரதிராஜா படங்களில் நான் காணும் இன்னொரு பிரதான பிரச்சினை, அவரது உயர்வு நவிற்சி – கனவுமயப் படுத்துதல் (சுடிஅயவேஉைஉளைஅ) இந்தக் கனவுமயப்படுத்தும் தன்மை எப்போதுமே பிரச்சினையின் தீவிரத்தன்மையைக் குறைத்து விடுகிறது. பிரச்சனையின் உயிருள்ள தன்மையையும் அதைப் பற்றிய ஆய்வுக்கான தூண்டுதலையும் தடுத்து விடுகிறது.

இதை இப்படி விளக்கலாம் என்று கருதுகிறேன். Kissing of the Spiderwoman என்ற பிரபலமான படமெடுத்த ஒருவர் பிரேசிலில் தெருக் குழந்தைகளைப்பற்றிப் படமெடுத்தார், மிசிசிப்பி மசாலா தந்த மீரா நாயர் சலாம் பம்பாய் என பம்பாய் நகரத்துத் தெருக் குழந்தைகளைப் பற்றிப் படமெடுத்தார்.

இந்தத் தெருவோரக் குழந்தைகளின் பிரச்சனை, அக்குழந்தைகளின் நோக்கில், அவர்களது நினைவுகளாகச் சொல்லப்பட்டிருந்தது.

இந்த கனவுமயப்படுத்தும் தன்மை, பாரதிராஜாபடங்களில் நிகழ்வது ஆண்பெண் உறவில். பாரதிராஜாவின் ஆண்பெண்கள் பெரும்பாலும் நடைமுறை மனிதர்கள் போல் உறவு கொள்வதில்லை. தங்களுக்கிடையிலான உறவை தெய்வீகப்படுத்திக் கொள்வதிலும் புனிதப்படுத்திக் கொள்வதிலும் ஈடுபடுகிறார்கள். பூக்களும், பட்டாம் பூச்சிகளும் தேவதை உடைகளும் பச்சைப்பசேல் வயல் வெளிகளும் தான் அவர்கள் அக உலகம்.

என்னுயிர்த் தோழனில் அவர் எடுத்துக்கொள்ளும் உலகம் ஒரு தீவிரமான கட்சி ஊழியன் வெறியனின் அவலமான வாழ்க்கை.

கருத்தம்மாவில் அவர் எடுத்துக் கொள்வது தமிழகத்தின் மதுரை ராமநாதபுரம்மவாட்டங்களில் நிகழ்ந்த பெண் சிசுக் கொலை பற்றியது.

இதைத்தொட்டதற்காக அவரைப் பாராட்டலாம். மற்றபடி.

இந்த இரண்டு பிரச்சனைகளுக்கும் தமிழ் இலக்கியத்தில் முன்னோடிகள் உண்டு.

1. ஜெயகாந்தனின் சினிமாவுக்குப்போன சித்தாளு
2. ஜி.நாகராஜனின் நாளை மற்றுமொரு நாளே

இவை இரண்டுமே அம்மாதிரி ஒரு 'பொறுக்கியின்' வாழ்வை தீவிரமாக அலசியிருக்கிறது. இந்த இரண்டு படைப்புகளுள் சடிஅயவேைஉளைஅ இல்லை

இதைப்போலவே பெண் சிசுக் கொலைப்பற்றி அங்கு சென்று ஆய்வு செய்த தகவல்களுடன் வெளிவந்த ராஜம் கிருஷ்ணாவின் நாவலும் உண்டு.

'மண்ணகத்துப் பூந்துளிகள்'

இதிலும் romaniticism இல்லை.

ஆக இம்மாதிரி வரலாற்றுரீதியான பிரச்சனைகளுடன் படம் எடுக்கும்பொழுது தீவிரமான அக்கறைகளுடன் அதை முயற்சிக்க வேண்டும்.

புதிய வெளியீட்டு மொழியும் வேண்டும் அதற்கு.

ஆனால் பாரதி ராஜாவின் உணர்ச்சி சார்ந்த romaniticist மொழிவழி சிந்தனைக் கட்டமைப்பு, திரைப்பட உருவம் அவர் சொல்ல விளையும் பிரச்சனைகளின் தீவிரத்தன்மையைக்குறைத்து விடுகிறது. "என் இனிய தமிழ் மக்களே" என்று தொடங்கி 'புதியதோர் உலகு நோக்கி அவள் போகிறாள்' என்று முடியும் வரைக்கும் அவரது வெளியீட்டுத் தளம் காவியத்தமிழ் சார்ந்தது.

எனது நிலைப்பாட்டை காட்சியமைப்புக்களைச் சுட்டுவதன் மூலம் நிறுவலாம்.

1. அபத்தமான நகைச்சுவைகளுக்கு உதாரணம் வடிவேலு மற்றும் நண்பனின் சேட்டைகள் (கருத்தம்மா)
2. பஸ்ஸில் முதல்நாளே டிக்கட் வாங்கி அடுத்த நாளும் பயணம் செய்யும் கிராமவாசி (கருத்தம்மா)
3. கால் நடை மருத்துவருக்கும் கருத்தம்மாவுக்கும் இடையிலான காதல் காட்சிகள் வரையில் (கருத்தம்மா)

படத்தில் இவர்களுக்கு இடையிலான romaniticism பாதிப்படம். சிசுக்கொலை தொடர்பான பிரச்சனைகள் விவாதிக்கப்படுவது பேசப்படுவது 4 காட்சிகளில் மட்டும்.

மற்றொன்று பாரதி ராஜாவுக்கு கிராமத்தில் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு நகரத்துக்காரன் வரவேண்டும். கால்நடை மருத்துவர், வாத்தியார், டாக்டர், வாத்தியாரம்மா, இப்படி யாராவது வர வேண்டும். அந்தந்த கிராமத்திலிருந்த பிரக்ஞையுள்ள பெண்ணோ ஆணோ எழமாட்டார்கள். பாரதிராஜாவின் கிராமங்களில் கூலித்தொழிலாளர் பிரச்சனை இல்லை, விவசாயிகள் எழுச்சி இல்லை, வெண்மணி பிரச்சனை மாதிரி அரிஜனங்கள் எரிக்கப்படுவதில்லை. புதிய அரசியல் பிரக்ஞையுள்ள இளைஞர்கள் இல்லை, பெண் சிசுக்கொலைக்கெதிரான பத்திரிகையாளர்களின் அறிக்கைகள் வெளிவந்தபோது இந்தியாவே நடுங்கியது. உலகமே அதிர்ச்சியுற்றது.

அந்தக் கொடூரமான பிரச்சனை பாரதிராஜாவின் கருத்தம்மாவில் வில்லன்களுக்கிடையில் காதலை நிறுவும் சோகமான காதல் கதையாகி விட்டது.

சிசுக்கொலையில் தப்பிப்பிழைத்த் பெண்குழந்தைகள் டாக்டராகவேண்டும் என்பதில்லை. அது முடியவும் முடியாது. தப்பிப் பிழைத்தவள் கூலித்தொளிலாளி ஆகலாம், பூலான் தேவியாகவும் ஆகலாம். அப்போது பெண் குழந்தைகளை வளர்க்க பெற்றவர்கள் தேவையில்லை. அவள் வாழ்வு முழுக்கப் போராடலாம். தப்பிப் பிழைத்த ஆண்கள் டாக்டர்களாகி விடுவதில்லை. டாக்டர்களாவதற்காக தப்பிப் பிழைக்கத் தேவை இல்லை. உயிர் வாழ தப்பிப்பிழைக்க வேண்டும்

Runner என்றொரு ஈரானிப்படம்

பெற்றோர்களில்லாத ஈரானியத் தெருக் குழந்தைகள் பற்றியது. தெருவிலேயே முழு வாழ்வையும் எவருடைய பாதுகாப்பும் ஏற்றுக் கொள்ளவும் அற்று அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். பறக்கும் விமானத்தைக் கையால் தொட்டு விட்டதாக அக்களிக்கிறான் ஒரு சிறுவன்.

சிறுமி கருத்தம்மா பேசியிருந்தால் நிஜமான கிராமம் நம் கண்களுக்கு வந்திருக்கும்.

ஏன் ஸரண்யாவின் குழந்தைகள் பேசியிருந்தால்கூட படம் உயிருடன், உக்ரத்துடன் எரிந்திருக்கும்.

ஸரண்யா தன் கணவனை கேட்கும் போது சொல்வார் 'போடா பொட்டப்பயலே'

பாரதிராஜா கடைசித் திரையில் சொல்வார் 'உடலில் பெண், உள்ளத்தில் ஆண்'

சொற்களின் ஆளுதிக்க அடிப்படைகளைச் சிந்தித்திருந்தால் கூட, கருத்தம்மா இப்படி அபலையாக ஆகி இருக்க மாட்டாள். ருத்திரகாளியாக இருந்திருப்பாள்.

பாரதிராஜாவின் பெரும்பாலான கிராமங்கள் கனவுமயமான புகைப்படம் போர்த்தின, பொய்யான, இல்லாத தொலைதூரக் கிராமங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சூழல்

## ஷாலினி

புரிய முடியாத புதிர்களுக்கெல்லாம் பதில் தரக்கூடியது இயற்கை ஒன்றே. இயற்கையைப் படைத்தவன் கடவுள் என்றால் கடவுளைப் புரிந்தது இயற்கை மட்டுமேயாகத் தான் இருக்க முடியும். தாய் தந்தையரைப் புரியாத சேய் உண்டோ?

பிள்ளைக்குப் பேரிழுக்குண்டானால் பெற்றோர் பொறுத்துக் கொள்ளார். அது போலவே இயற்கைக்குப் பேரழிவுண்டாகும் போதும் கடவுள் பொறுத்துக் கொள்ளார். இப் பிரபஞ்சமும் அதன் கூறுகளும் கடவுளின் சொத்து. மானிடர் இவற்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டுள்ளனரே தவிர அவற்றுக்கு சொந்தக் காரர்களல்ல. அவர்கள் குடியிருக்கும் வீட்டைக் குப்பைக் காடாக்கி அசுத்தப்படுத்தும்போது சொந்தக்காரன் சும்மாயிருக்க மாட்டான். ஒன்றில் வெருட்டுவான் அல்லது விரட்டுவான்.

தொழில் நுட்ப வளர்ச்சி என்ற பெயரில் இப் பிரபஞ்சமே குப்பைக் காடாகி வருகிறது. இதைப் பொறுக்காத இயற்கையும் தன்னாலான அளவில் சொல்லும் வழிகளில் சொல்லிப் பார்க்கிறது. அதையும் மீறி அதன் வாடகைக் காரர்களான நாங்கள் எங்கள் வாடகைப் பிரபஞ்சத்தை அசுத்தப் படுத்திக் கொண்டு தான் வருகிறோம்.

பூமியதிர்ச்சி, எரிமலை வெடிப்பு, வெள்ளப் பெருக்கு, வரட்சி, கொள்ளை நோய்கள் என்று இயற்கையும் ஏராளமான எச்சரிக்கைகளைத் தந்து வருகிறது. வர வர இவ் வெச்சரிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்

### பாவனை வகையறாக்கள்

**கழிநீர்க் குழாய் அடைப்பு(clogged drains)**

கால் கிண்ணம் சூளைச் சோடா, அரைக் கிண்ணம் வினாக்கிரி இவற்றைச் சேர்த்து அடைத்துப் போன கழி நீர்த் தொட்டியில் விட்டுக் கலக்கிய பின் பத்து நிமிடங்கள் பொறுத்து நந்நீரினால் கழுவக் கழிநீர்க் குழாயடைப்பு எடுபடும்.

**பாத்திரக் கழுவல்(dish washing)**

சவர்க்காரத் துகளை சுடு நீரில் சேர்த்து பாத்திரங்களைக் கழுவிக் கொள்ளலாம். தேசிக்காய்ச் சாறைச் சேர்த்துக் கொள்ளுவதன் மூலம் எண்ணை மற்றும் கொழுப்புப் படிவுகளை அகற்றிக் கொள்ளலாம்.

**கிருமி நாசினி( disinfecting)**

அரைக் கிண்ணம் போராக்ஸ், 4 லீற்றர் சுடுநீர் கலந்து கிருமிநாசினியாகப் பாவித்துக் கொள்ளலாம். மருத்துவ மனைகளில் கிருமியகற்றும் முறைகளில் இதுவுமொன்று.

**கண்ணாடி சுத்தம் செய்தல்(glass cleaner)**

வெள்ளை வினாக்கிரியைச் சுடுநீருடன் தலா ஒரு கிண்ணம் வீதம் கலந்து கண்ணாடிகளைக் கழுவிக்

**கம்பள விரிப்பு மணமகற்றல்(carpet deodoriser)**

துர் மணம் பரப்பும் கம்பள விரிப்புகளில் சூளைச் சோடாவைத் தூவி ஒரு மணித்தியாலத்தின் பின் கூட்டித் துப்பரவு செய்து கொள்ளலாம்.

**நறுமணம் பரப்பிகள்(air freshners)**

கழிவுக் கூடைகளின் அடியில் அரைக் கிண்ணம் போராக்ஸைப் போட்டு வைப்பதன் மூலமும், பைன், மணமுள்ள பூக்கள், லவண்டர் போன்ற இயற்கையான நறுமணம் பரப்பிகளை தேவையான இடங்களில் பரப்பி வைப்பதன் மூலமும் நறுமணங் கமழச் செய்யலாம்.

**துணி துவைத்தல்(laundry)**

எண்ணை அல்லது கொழுப்புப் படிந்த துணிகளை ஈரமாக்கி போராக்ஸ் இல் தோய்த்து எடுக்க இவ்வழுக்குகள் அகன்றுவிடும்.

சலவைத் தூளை கடையில் வாங்குவதற்குப் பதிலாக நீங்களே தயாரித்துக் கொள்ளலாம். 5 கிண்ணம் சுத்தமான சவர்க்காரத் துகளையும் 1 கிண்ணம் சலவைச் சோடாவையும் கலந்து சலவைத் தூளாகப் பாவித்துக் கொள்ளலாம்.

அரைக் கிண்ணம் சூளைச் சோடாவைச் சலவையின் இறுதிக் கழுவலின் போது பாவித்தால் ஆடைகள் மென்மையாகவிருக்கும்.

துணிகளை வெண்மையாக வெளுக்க அரைக் கிண்ணம் போராக்ஸை சலவையின் போது கலந்து கொள்ளலாம்.

1 மேசைக் கரண்டி சோளமாவை ஒரு கிண்ணம் நீரில் கரைத்து சீறிப் போத்தலில் அடைத்து வைத்துக் கொண்டால் துணிகளுக்குத் தேவையான போது கஞ்சி போட்டுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

[illegible]
வரட்சி, கொள்ளை நோய்கள் என்று இயற்கையும் ஏராளமான எச்சரிக்கைகளைத் தந்து வருகிறது. வர வர இவ் வெச்சரிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பிரளய காலம் ஆரம்பித்து விட்டதோ என்னுமளவுக்கு சில நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அப்படியிருந்தும் மனிதன் உணர்ந்து கொள்வதாகவில்லை.

நமது வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது நம்மில் தான் தங்கியிருக்கிறது. இராமரணைக்கு அணில்களின் பங்களிப்பு எவ்வளவு உதவி புரிந்தது என்று நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். இப் பிரபஞ்சத்தைச் சுத்தமாக வைத்திருக்க நம்மால் என்ன செய்ய முடியும்?. நிறையவிருக்கிறது. உங்கள் பங்கை நீங்கள் செய்து கொள்ளுங்கள். உங்கள் கடமை உங்கள் வீட்டிலேயே ஆரம்பிக்கட்டும்.

இங்கே தரப்படும் பொருட்கள் உங்கள் கடமையின் ஆரம்பத் தேவைகள். இவற்றைப் பாவித்து சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் வழிமுறைகள் பற்றிப் பின்னால் விவரிக்கப் படும்.

**நச்சுத் தன்மையற்ற வீட்டுப் பாவனைப் பொருட்கள்**

சூளைச் சோடா ( baking soda)
வெள்ளை வினாக்கிரி (white vinigar)
ஒலிவ் எண்ணை (olive oil)
சவர்க்காரத் துகள்கள் (soap flakes)
சோளக் கஞ்சி (corn starch)
உப்பு (salt)
தேசிக்காய்ச் சாறு (lemon juice)
சலவைச் சோடா (washing soda)
போறாக்ஸ் (borax)
உருக்கிழை (steelwool)
அலுமினியம் (aluminium)

மேலே குறிப்பிட்ட மூலப் பொருட்களை சுகநல உணவுக் கடைகளிலும் சில மளிகைக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

வெள்ளை வினாக்கிரியைச் சுடுநீருடன் தலா ஒரு கிண்ணம் வீதம் கலந்து கண்ணாடிகளைக் கழுவிக் கொள்ளலாம். சாளரக் கண்ணாடிகளுக்கு ஒன்றுக்குப் பத்து என்ற விகிதத்தில் பாவிக்கலாம்.

**பூஞ்சணம் அகற்றல்(mold and mildew)**

பற்தூரிகை (tooth brush) அல்லது நிலமுரஞ்சி (scrubber) யை வெள்ளை வினாக்கிரியில் தோய்த்து சூளைச் சோடாவை ஒற்றியெடுத்து குளியலறை மூலை முடுக்குகளில் படிந்திருக்கும் பூஞ்சண வளரிகளை அகற்றிக் கொள்ளலாம்.

**சாயப் பதிவுகள்(stains)**

சூளைச் சோடாவையும் சோடா நீரையும் கலந்து உடுப்பு மற்றும் கம்பள விரிப்புகளில் ஊற்றுப் பட்ட சாயப் பதிவுகளைக் கழுவிக் கொள்ளலாம்.

**சூளை அடுப்பு சுத்தம் செய்தல்(oven cleaning)**

தலா ஒரு மேசைக் கரண்டி சூளைச் சோடாவை சுடுநீரில் கலந்து உருக்கிழையைப் பாவித்து சூளையடுப்பைச் சுத்தம் செய்து கொள்ளலாம். அல்லது 2 மேசைக்கரண்டி சவர்க்கார நீரில் 2 மேசைக் கரண்டி போராக்ஸைக் கலந்து வெந்நீருடன் சீறிப் போத்தலில் இட்டு வைத்துக் கொண்டு தேவையான போது சூளையடுப்பின் உள்ளோரங்களில் தெளித்து 20 நிமிடங்களின் பின்னர் உருக்கிழையால் துடைத்துக் கொள்ளலாம்.

**கேத்தில் சுத்தம் செய்தல்(kettle descaling)**

வினாக்கிரியையும் நீரையும் ஒன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் கலந்து கேத்தலிலிட்டுக் கொதிக்க வைப்பதன் மூலம் உள்ளே படிந்திருக்கும் சுண்ணாம்புப் படிவைச் சுத்தம் செய்து கொள்ளலாம்.

கரைத்து சீறிப் போத்தலில் அடைத்து வைத்துக் கொண்டால் துணிகளுக்குத் தேவையான போது கஞ்சி போட்டுக் கொள்ளலாம்.

சலவைத்தூள், கோப்பை கழுவும் திராவகம் போன்றவற்றில் காணப்படும் பொஸ்பேற் கூட்டுப் பொருள் அல்கா வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது.

**துலக்கிகள்(polishes)**

1 மேசைக் கரண்டி உப்பையும் 1 மேசைக் கரண்டி சூளைச் சோடாவையும் 1 சாடி வெந்நீரில் கலந்து அதற்குள் ஒரு துண்டு அலுமினியம் தகட்டைப் போட்டு வெள்ளிப் பாத்திரங்களை இச் சாடியில் ஊறவைத்தால் அவை துலக்கமாகும்.

வினாக்கிரியையும் சூளைச் சோடாவையும் கலந்து ஈரத் துணியால் துடைக்கும்போது எந்த உலோகப் பொருட்களும் துலக்கம் பெறும்.

காலணிகளைத் துலங்கச் செய்ய வால்நட் அல்லது ஒலிவ் விதைகளின் எண்ணையைப் பாவித்து காலணிகளைத் துலங்கச் செய்யலாம்.

மரத் தளபாடங்களைத் துலங்கச் செய்ய 3 மேசைக் கரண்டி ஒலிவ் எண்ணையையும் 1 மேசைக் கரண்டி வெள்ளை வினாக்கிரியையும் கலந்து மென் துணியால் துடைத்துக் கொள்ளலாம்.

நிலம், சுவர், கழிவறை துலக்க வேலைகளுக்கு கால் கிண்ணம் சலவைச் சோடாவை 1 லீற்றர் வெந்நீரில் கலந்து பாவித்துக் கொள்ளலாம்.

பல வகைத் தளபாடங்களிலும் நிலப் படுக்கைகளிலும் பாவிக்கப்படும் துலக்கிகளில் பீனோல் என்ற பதார்த்தம் பாவிக்கப் படுகிறது. இது ஒரு வகையான புற்று நோய்க்குக் காரணியாகவிருக்கிறதெனச் சந்தேகிக்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வளர்ந்தவை வளர்பவை வளர்கின்றவை

# "நடனம் போன்ற விஷயத்திலாவது முற்று முழுதாக எமது கலாச்சாரத்தைக் கடைப்பிடித்து வாழலாம்"

### நடன ஆசிரியை சகுந்தலா மோகன் அவர்களின் சில நியாயமான கருத்துக்கள்

## சி.கிருஷ்ணராஜா

மொழியிலே ஏற்படாத அபிமானம் கலையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் காலம் இது. ஒரு கலையைக் கற்றுக் கொள்வது கலை மேம்பாட்டுக்கு என்றும் இல்லாமல் ,மனத்திருப்திக்கு என்றும் இல்லாமல், ஒரு 'பாஷன்' ஆகவும் கௌரவம் ஆகவும் வர எத்தனித்துக் கொண்டிருக்கிறது. எது எப்படியானாலும் கலை அழியாது அடுத்த தலைமுறைக்கும் காவப்படுவது மகிழ்ச்சி அளிக்கும் விஷயம்.

இந்தப் பண்பாட்டுக் கலையில் ஒன்றான நடனக்கலையை சரியான முறையில் நடன ஆசிரியர்கள், விலை என்று மட்டும் கருதாது வளர்க்கிறார்களா என்பது சிக்கலான கேள்வி. 'காசு கொடுத்தால் காலைத் தூக்காமலே பரதநாட்டிய அரங்கேற்றம் செய்து வைப்பார்கள்' என்னும் பொதுப்படையான அபிப்பிராயம் ஏற்படுவது போல பல சம்பவங்கள் நடைபெறுவதாகக் காற்றினில் வரும் செய்திகள் துரதிஸ்டவசமானவை.

ஏதற்கும் நடனக் கல்வி பற்றிய சில தகவல்களைப் பெற , தமிழ் நாட்டில் பயின்று, நடனம் சங்கீதம் ஆகிய துறைகளில் பட்டம் பெற்று , அங்கு கல்லூரியில் நடன ஆசிரியாராகப் பணியாற்றிய திருமதி.சகுந்தலா மோகன் அவர்களிடம் கேட்டேன். இவர் கனடாவில் 'நிர்த்தியா நாட்டிய மன்றம்' என ஒன்றை உருவாக்கி கடந்த நான்கு வருடங்களாக நடன வகுப்பக்களை நடத்தி வருகிறார். பல கலைவிழாக்களிலும் தனது மாணவர்களைப் பங்குபற்ற வைத்திருப்பதுடன் தானே பல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைப் பயிற்றியுள்ளார். அவரின் பதில்களில் இருந்து கனடாவில் நடனக் கலை வளர்ச்சி , பெற்றோர்கள் நினைத்தால் சரியான பாதையில் செல்ல நம்பிக்கை உண்டு என்பது புலனாகிறது.

கேள்வி: நடனத்தைப் பயிற்றும் முறை ஆளுக்கு ஆள் வேறுபடும். சரியான தகுந்த நடன ஆசிரியரைத் தேர்ந்தெடுப்பதாயின் என்ன விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்? எவ்வகையான தகுதிகளை நடன ஆசிரியரிடம் எதிர்பார்க்கவேண்டும்?

சகுந்தலா: ஆசிரியர்கள் நடனத்துறையில் எதாவது கல்வியைப் பூர்த்தி செய்தவராக அல்லது முறைப்படி குருவிடம் நடனத்துறையில் உள்ள பல அம்சங்களையும் கற்று அறிந்தவராக இருக்கவேண்டும். அத்துடன் அரங்கேற்றம் என்ற ஒன்றைத் தாம் செய்தவராக இருக்க வேண்டும். நடனக் கல்வியை எப்படிப் போதிப்பது என்பது பற்றி தமது குருவிடம் விஷேடமாகக் கற்றவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறானவர்களிடம் கற்க ஆரம்பித்தால்தான் நடனக்கலையை இலகுவாகவும் வேகமாகவும் முறைப்படியும் கற்றுக் கொள்ள முடியும். ரொரன்ரோவைப் பொறுத்த வரையில் 40க்கும் மேற்பட்ட நடன ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் எத்தனைபேர் மேலே குறிப்பிட்ட தகுதியை உடையவர் என்பது கேள்விக்குரிய விஷயம். பொதுவாக நடன ஆசிரியரின் தகுதியை வைத்து தமது பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்கள் இங்கு மிகமிகக்குறைவு. வசதியைப் பொறுத்தே எல்லாம்.

கேள்வி: நடன நிகழ்ச்சிகளில் பெண்கள், ஆண்களின் பாத்திரம் ஏற்றுப் பாவனை செய்திருக்கிறார்கள். ஆனால் பெண்களின் பாத்திரம் ஏற்று ஆண்கள் வருவது குறைவு. நடனத்தில் ஆண்களுக்கு இது - பெண்களுக்கு இது என்று வேறுபட்ட விஷயங்கள் உண்டா?

சகுந்தலா : அவ்வாறுவேறுபடுத்தப்படுவதில்லை. ஆனால் நளினமாகச் செய்யப்படும் சில பாத்திர அமைப்புகளுக்கு பெண்களே பொருத்தமாக இருக்கும். அதே போல சில இடங்களில் பெண்களிலும் பார்க்க ஆண்களே கலந்து கொள்வது சிறப்பாக அமைகின்றது.

கேள்வி: நடன ஆசிரியர்கள் எல்லோரையும் இணைத்து ஏதாவது அமைப்பு இங்கு உள்ளதா? நடன ஆசிரியர்களுக்கு இடையில் தொடர்புப் பாலமாக ஏதும் உள்ளதா?

சகுந்தலா: அப்படியென்றால் உலகத்தமிழரின் கீழ் நடத்தப்படும் 'நாட்டியமாலா'வைக்குறிப்பிடலாம். சகல நடன ஆசிரியர்களும் அழைக்கப்படுகின்றனர். நிகழ்ச்சிகளை நடத்த சந்தர்ப்பம் அங்கே கொடுக்கப்படுகின்றது. விரும்பியவர்கள் தமது நிகழ்ச்சிகளையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கேள்வி: நடனம் என்பது தமக்கு என்று அல்லாமல், பார்வையாளரைக் கவரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். அவ்வாறாயின் நடனம் ஆடும் பெண்ணுக்கு உடலமைப்பு பொருத்தமானதாக இருக்கவேண்டுமா? நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளப் பெண்களைத் தெரிவு செய்யும் போது உடலமைப்பு, அழகு என்பனவற்றை வைத்துப் பாரபட்சம் காட்டப்படுவதில்லையா?

சகுந்தலா: உடலமைப்பு அழகு என்பவை ஓரளவு இருப்பது நல்லதுதான். ஆனால் அவற்றை வைத்துப் பாரபட்சம் காட்டப்படுவதும் இல்லை. அது அவசியம் என்றும் இல்லை. நல்ல உடலமைப்பு உள்ள பெண்ணுக்கு சிலவேளை நடனம் இடும் முறையில் தேர்ச்சி போதாமல் இருக்கலாம். அதே வேளை நல்ல உடலமைப்பு அற்றவர் நடனம் இடும் முறைகளில் சோபித்துக் காணப்படலாம். ஆனால் பாத்திர அமைவுக்கு ஏற்ப சிலவேளைகளில் பெண்களைத் தேர்ந்தெடுப்பதுண்டு. உதாரணமாக சிவத்தாண்டவத்தில் ஆடும் சிவன் ஆண்மைத்துவமும் மிடுக்கும் உடையதாக அமைய வேண்டும் அல்லவா.

கேள்வி: எமது மரபு நடனங்களுடன் வட இந்திய நடனங்களான குஜராத்தி, வங்காளி, குச்சுப்புடி போன்றவற்றவற்றைச் சங்கமித்துக் கொண்ட நாம் இன்று கனடாவில் வந்த பின் 'செவ்விந்திய நடனம்', பலே நடனம் போன்றவற்றையும் இணைத்துக் கொண்டால் என்ன?

சகுந்தலா: எமது நடனங்களைப் பொறுத்த வரையில் முழுப்பாதமும் நிலத்தில் படவேண்டும். ஆனால் 'பலே' போன்ற மேலைத்தேச நடனங்களுக்கு நுனிவிரல் மட்டும் நிலத்தில் படவேண்டும். 'பலே' க்குப் பயன்படுத்தப்படும் உடுப்புகளும் எமது கலாச்சாரத்துடன் ஒத்துவராதவை. எனவே இரண்டையும் கலப்பது பொருத்தம் அற்றது என்றே நினைக்கிறேன். அது மட்டும் அன்றி இங்குள்ள மாணவர்கள் இங்குள்ள கலாச்சாரத்துடன் ஒட்டிப் போவதற்கான சந்தர்ப்பங்களே அதிகம் உண்டு. நடனம் போன்ற விஷயத்திலாவது முற்று முழுதாக எமது கலாச்சாரத்தைக் கடைப்பிடித்து வாழலாம் என்பதே எனது கருத்து.

கேள்வி: தற்போது இங்குள்ள நடன ஆசிரியர்கள் எல்லலோரும் சினிமாப் பாடல்களுக்கு ஆடுவதைக் கற்பித்து நாட்டியக் கலைக்குக் களங்கம் விளைவித்துவிட்டர்ாகள் என்று கூறப்படும் கண்டனத்துக்கு உங்கள் பதில் என்ன?

சகுந்தலா: எமது நடனத்துக்கு இசைந்த சினிமாப்பாடலகள் உண்டு. அவற்றுக்கு அபிநயம் கற்றுக் கொடுத்தால் அதைத் தவறென்று சொல்லவும் மாட்டேன். அதைச் செய்வதில் நான் பின்னிற்கப் போவதும் இல்லை. நடனத்தை முறைப்படி கற்றுக் கொண்டவர்கள் சினிமாப் பாடலுக்கு ஆடும்போது அதில் சிறப்பு இருக்கும். ஆனால் சினிமாப் பாடலுக்கு என்று மட்டும் 'பாதப் படிகளை' கற்றுக் கொடுப்பது உண்மையான நடனக் கல்வி அல்ல.

கேள்வி: படிமுறையில் பாடம் சொல்லிக் கொடுக்கப்படும் வீடியோ கசட்டை மட்டும் வைத்துக் கொண்டு நடனம் கற்றுக் கொள்ள முடியாதா?

சகுந்தலா: நிச்சயமாக நேரடிக் குருகுலவாசம் இவ்வாறான கலைகளைக் கற்றுக் கொள்வதற்கு மிகஅவசியமானது

கேள்வி: ஒவ்வொரு கலையிலும் 'கிறியேற்றிவிற்றி' (ஆக்கநோக்க சிந்தனை) இருக்கிறது. நடனக்கலையில் அப்படி ஏதாவது...

சகுந்தலா: நடனக் கலையைப் பிரச்சார ஊடமாகப் பாவிக்கலாம் என்பது உண்மை. புதிய கருத்துக்களையும் பாத்திரங்களாகச் சித்தரித்தும் செய்யலாம். ஆனால் அவ்வகையான நிகழ்ச்சிகளுக்கு போதிய வரவேற்பு இருக்கும் என்று கூறமுடியாது. அந்நிகழ்ச்சிகளுக்கு அமைவாகப் புதிய பாடல்கள், சுரங்கள் எல்லாம் செய்ய காலம் எடுக்கும்

கேள்வி: பிரபலயமாக வந்த பலரின் நடனங்களைப் பார்க்கும் போது ஒவ்வொன்றும் வெவ்வேறு ரகமாக அமைகின்றது. ஒரே நடனத்தை வெவ்வேறு ஆட்கள் ஆடும்போது வித்தியாசம் தென்படுவது ஏன்? சுவர்ணமுகி போன்றவர்கள் உடலை நெளித்து ஆடும் பாவகம் மிக வித்தியாசமானது. இவை வித்தியாசமான நடனங்களா? அல்லது அவரவர் தமக்கு என்று தோற்றுவித்த வகைகளா?

சகுந்தலா: சிலரின் அசைவுகள் மிக வேகமானவை. சிலரின் அசைவுகள் மிகவேகம் குறைந்தவை. நடனத்தைக் கற்றுக்கொண்டபின் தமக்கு என்று ஒரு பாணியைப் பலரும் ஏற்படுத்திக் கொள்கின்றனர். அந்தப் பாணியில் அவர்கள் தொடர்ந்து நிகழ்ச்சிகளைச் செய்யும் போது காலக்கிரமத்தில் அது சோபிக்க ஆரம்பிக்கின்றது. சுவர்ணமுகி போன்றவர்கள் பாவிக்கும் முறைகள் தமக்கென்று கொண்ட பிரத்தியேக அங்க அசைவுகள்.

கேள்வி:
நாட்டிய நிகழ்ச்சிகள் பற்றிப் பொதுவாக பத்திரிகைகளில் வரும் விமர்சனங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன? நாட்டியத்தைப் பற்றிச் சரியாகத் தெரியாதவர்கள் விமர்சனம் எழுதலாமா? 'கார்மேகநிறப் பெண்கள் தமது கால்களைக் காட்டி....' என்று ஒரு விமர்சனம் அமைந்தால் அது ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதா?

சகுந்தலா: விமர்சனம் என்றால் குறையையும் நிறையையும் எழுத வேண்டும். அதுதான் நல்ல விமர்சனத்துக்கு அழகு. ஒரு நிகழ்ச்சியைப் புகழ்ந்து பத்திரிகை ஒன்று எழுதிய காரணத்துக்காக, அந்தப் பத்திரிகையுடன் பிணக்கம் கொண்ட வேறு பத்திரிகைகள் அந்த நிகழ்ச்சியில் உள்ள நல்ல அம்சங்களையையும் கூடாது என்று விமர்சித்து எழுதுவது நடந்து கொண்டிருக்கிறது. அது சரியல்ல. விமர்சகருக்கு ஓரளவாவது நடனம் பற்றித் தெரிய வேண்டும். அல்லது பார்வையாளன் என்ற நிலையில் எழுதுவதானால் மேலோட்டமாக ஒரு வரையறைக்குள் மட்டுமே எழுதலாம். அதைவிடுத்து 'காலை அகட்டி வைக்க வேண்டும்.... அப்படி..இப்படி..' என்று எழுதுவதானால் நடனம் பற்றிய அறிவு அவர்களுக்குத் தேவை. ஒவ்வொரு நடனங்களுக்கும் அங்க அசைவு இலட்சணங்கள் வேறுபட்டவை என்பதை அவர்கள் அறிவார்களா? நீங்கள் குறிப்பிட்டது போன்று நடனக் கலையைக் கேவலப்படுத்துவது போன்று அமையும் விமர்சனங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நடன ஆசிரியை என்ற முறையில் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும் . ஆட்சேபம் தெரிவிக்கிறேன்.

கேள்வி: நடன ஆசிரியராகப் பணியாற்றுகையில் பல பிரச்சனைகளை எதிர் நோக்கவேண்டும். அப்படி எதாவது உங்கள் மனத்தைக் குடைந்து கொண்டிருக்கும் விஷயம் உண்டா?

சகுந்தலா: முக்கியமான பிரச்சனை மாணவர்களும் பெற்றோர்களும் குரு ஸ்தானத்தில் இருந்து நடனம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் 'அகௌரவம்'. ஒரு கலையைச் சரியாகக் கற்றுக் கொள்வதானால் முதலில் குருவுக்கு உரிய இடம் அளிப்பது அவசியம். இவ்வாறான தெய்வீகத் தன்மை பொருந்திய கலைகளில் பணிவு, குருவணக்கம் என்பன இயற்கையாகவே மாணவர்களுக்கு அமைய வேண்டும். பெற்றோர்கள் 'இந்த ஆசிரியை தம்மிலும் வயதில் சிறியவள்தானே' என்ற நினைவுடன் குரு ஸ்தானத்தில் உள்ள ஆசிரியைத் தாழ்த்தி நினைப்பதுவும் , எதோ தம்மிலும் தரம் குறைந்ததாக கருதுவதும் கூடாது. குரு என்று வரும் போது அதற்கு ஒரு மரியாதை, மதிப்புக் கொடுக்கவேண்டும் என்பதைப் பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை இந்திய நாடுகளில் நடனம் பயில்பவர்கள் ஒன்றில் அந்தக் கலையில் ஈடுபாடு கொண்டவர்களாகவோ அல்லது கலையின் அருமையை உணர்ந்த வகுப்பினராகவோ இருந்தமையால் குருவுக்கு மதிப்பு இருந்தது. இங்கு சகலரும் நடனம் கற்க எண்ணும் போது, நடனத்துக்கோ குருவுக்கோ கௌரவம் அளிப்பதன் அவசியம் மறந்துவிடப்பட்டது. சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நடனம் கற்பிக்க அழைத்து வருவார்கள். தனது பிள்ளையை நிகழ்ச்சியில் குறைந்த நேரமே சேர்த்துக்கொண்டது போன்ற சின்னக் காரணங்களுக்காக திடிரென்று வகுப்பில் இருந்து நிறுத்துவார்கள். வகுப்பில் இருந்து நிறுத்தும் போது காரணத்தைச் சொல்லவும் மாட்டர்கள். அறிவிக்கவும் மாட்டார்கள். இவ்வகையான அநாகரிகமான தன்மைகள் தமிழர்களில் அதிகரிக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. மாணவர்களில் சிலர் இங்குள்ள பாடசாலையில் ஆசியர்களை எப்படியான தரத்தில் நடத்துகின்றார்களோ அதே வகையில் நடன ஆசிரியர்களான எம்மையும் கருதுகின்றனர். நடனம் என்பது ஒரு அர்ப்பணம். அதைக் கற்பதும், கற்பிப்பதும் புனிதமானவை.

கேள்வி: எமது நடனக் கலைகளைக் கற்றுக் கொள்வதில் மதம் ஒரு தடையா? நடனத்தில் வரும் சில அம்சங்கள் இந்து சமயத்துடன் ஒட்டி இருக்கின்றது. எனவே மாற்று மதத்தினர் மானசீகமாக நடனத்தைக் கற்கமுடியுமா?

சகுந்தலா: நடனம் என்பது ஒரு கலை. அதில் சில மரபுகள் கட்டுப்பாடுகள் உண்டு. அந்தக் கலையைக் கற்கும் போது அதற்கான மதிப்பு அளிப்பதை எந்த மதமும் தடை செய்ய முடியாது. அவ்வாறு தடைசெய்தால் அந்த மதம் எதற்காக என்பதுதான் எனது அபிப்பிராயம். நான் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவள். என்னிடம் நடனம் பழகும் மாணவியில் ஒருத்தி முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவள். கலைவேறு– மதம் வேறு.

**இது தமிழ் அறிஞர்களுடனான நேர்காணல் அல்ல; உள்காணல்.**

**தெளிதேனில் தெளிந்தேன்**

# பெரியோர் வார்த்தை அமிர்தம்

## சிதம்பரம் வடிவேலனார்

நல்லோர்கள் என்றால் பிறருக்கு நன்மை செய்பவர்கள் என்பது பொருள். தீயோர்கள் என்றால் பிறருக்கு தீமைசெய்து தங்களுக்கும் தீமை செய்பவர்கள் என்பது கருத்து. பெரியோர்கள் என்போரில் வயதில் மூத்தோர், அறிவில் முதிர்ந்தோர் என்பவர்கள் அடக்கம். சிறியோர்கள் என்றால் வயதில் குறைந்தோர் என்பது கருத்து அல்ல. அறிவில் குறைந்தோர் என்பதே சரியான கருத்து.

சனகர், சனாதனர், சனந்தனர், சனக்குமாரர் என்போர் வயதில் மூத்தோர். நாலுவேதம், ஆறு அங்கம், பதினெண்புராணம், இருபத்தெட்டு ஆகமம் என்பவற்றை நன்கு கற்று அறிந்தவர்கள். இருந்தும் இவர்களுக்கு மெய்ப்பொருள் விளங்கவில்லை. உடனே இவர்கள் சிவனிடத்தே சென்றார்கள். சிவனும் தெட்சணா மூர்த்தியாகி சின்முத்திரை காட்டி மெய்ப்பொருள் விளக்கம் செய்தார். செய்தபோது வாய் பேசவில்லை. வலது கையில் கட்டைவிரலின் அடியில் ஆட்காட்டி விரலை வளைத்துத்தொடுமாறு செய்து மற்றைய விரல்களை நீட்டி காட்டுதல் சின்முத்திரை எனப்படும். இதனுடைய கருத்து மும்மலத்தைவிட்டு விட்டு ஆத்மா இறைவனுடன் செல்லவேண்டும் என்பதே. இதைத்தான் சிவன் தெட்சணாமூர்த்தியாகி நால்வருக்கும் உணராமல் உணர்த்தினார். சொல்லாமல் சொன்னார். புரியாமல் புரியவைத்தார். விளங்காமல் விளக்கினார். இதைத்தான் கந்தபுராணம்.

நன்னல மைந்தர்காள் ஞானபோதகம்
சொன்னடையன்றுது துயரம் நீங்கியே
இன்னிலை மோனமோ டிருந்து நந்தமை
உன்னுதலே என உணர ஒதினான்

என்று குறிக்கும்.

இதை பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளி என்று தேவாரம் சொல்லும்.

உணராமல் என்னென்று உணர்த்தலாம், சொல்லாமல் என்னென்று சொன்னார் என்றெல்லாம் நாம் கேள்வி கேட்கலாம். அங்கேதான் எங்களுடைய பிழை இருக்கிறது. இந்தக் கேள்விகள் எல்லாம் 'உன்னுள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாரடா என்ற ஆத்மீக வாதிகளிடம் சொல்லாது. இது கேட்ககூடிய கேள்வியும் இல்லை. இப்படியான கேள்விகளை விஞ்ஞானிகளிடம் கேட்டால் அவர்கள் ஆத்மீகம் கலக்காத சிலவிடைகள் தரலாம்.

இந்தத் தெட்சணாமூர்த்தி இளமையாக இருக்க சீடர்கள் தள்ளாடிய வயதில் காட்சி தருகின்றனர். தற்காலத்தில் சிறு வயதுடையவர்களிடம் நல்ல குணம் நற்செயல்கள் இருந்தாலும் வயதில் மூத்தோர் அதனை மதிப்பதில்லை. இவர்கள் எல்லோரும் பெரியோர் வார்த்தை மட்டும் தான் அமிர்தம் என்று எண்ணி வாழ்பவர்கள். வயதில் குறைந்த சிறுவர்களிடம் நல்ல கருத்துகள் நிறைய இருந்தாலும் சில பெரியவர்கள் "அவன் பேய்ப் பொடியன் என்னவோ சொல்லுகிறான் எமக்குத்தெரியாதா?" என்று அசட்டை பண்ணுவார்கள்.

ஆனால் அந்த சிறுவன் சொன்ன விசயம் அவருக்குத் தெரியாது. அந்த சிறுவன் சொன்ன பிறகுதான் அது தெரிந்திருக்கும்.

ஆனல் ஆத்மஜோதி நா.முத்தையாவில் இந்த விடயத்தில் ஒரு வித்தியாசமான குணத்தை நாம் காணலாம். என்ன அந்தக் குணம் என்றால் சிறிய வயதுடையோர் செய்யும் நல்ல செயலில், நல்ல சொல்லில் பெரியோர்களின் செயல்களைக் கண்டு அந்த சிறியவர்களையும் பெரியோராக்கி கொள்கின்ற மாண்பு இவரிடம் மிகுதியாக காணக் கிடக்கின்றது.

ஆத்மஜோதி நா. முத்தையனார் இலங்கையில் உள்ள நாவலப்பிட்டியில் அமைந்துள்ள கதிரேசன் குமார மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு அதிபராக உயர்ந்து இளைப்பாறியவர். இவருடைய சேவைக்காலத்தில் பலர் பயன்பெற்று உய்தியடைந்தனர். தன்னலமில்லாச் சேவை ஆசிரியர் சேவையில் இருக்கவேண்டும். அத்துடன் அர்ப்பணிப்பு மனதும் இருக்கவேண்டும். ஒரு பசுவை எடுத்துக் கொள்ளுங்கள், தான் வாழுகின்ற காலத்தில் எவ்வளவு பயன்களை உலகுக்குச் செய்கின்றது . புல்லைத் தின்று பாலைத் தருகின்றது. தேங்காச் சக்கையைத் தின்று பயன் நிறைந்த பசளையை ஈய்கின்றது.

"விடு நலமருங்குள் படுபுல் ஆள்ந்து
நெடு நல மருங்கின் மட்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந்து ஊட்டும்

என்று பசுவின் சிறப்பை சங்கம் மருவிய காலத்தில் எழுந்த அறநூலான மணிமேகலை சொல்லும். இங்கே பசுவின் சிறப்பு என்பதன் கருத்து அப்பசுவின் சேவையைத்தான் சுட்டுகின்றது. யக்ஞ மயம் என்றும் வேதத்தில் பசுவின் சேவையை சிலாகிப்பர். தான் பெற்றதைவிட அதிகமாக உலகுக்கு சேவையைத் தந்தால் அது வேள்விமயம் தானே. இது வழங்குதல் என்றும் வாழ்வு முறையில் அடங்கும். இந்த யக்ஞமய வாழ்வை ஆத்மஜோதி நா.முத்தையனார் மேற்கொண்டவர். ஈழத்து அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் இதனைக் கண்டு பின் வருமாறு ஒரு இடத்தில் பாடுகிறார்.

பாற்பசுநேர் ஆத்மஜோதி உலகு காக்கும்
பரமசஞ் சீவியென வாழி வாழி!

இந்த நலம் கொண்ட ஆசானின் சேவை எப்படியிருக்கும்? இவர் படிப்பித்த வித்தியாலயத்தில் இவர் ஒவ்வொரு நாளும் எல்லா வகுப்பறைகளுக்கும் சென்று மாணவர்களின் குறை நிறைகளை தீரவிசாரித்து தீர்வு காணும் பழக்கத்தை கொண்டிருந்தார். இப்படியாக வகுப்புகளுக்கு விஜயம் செய்கின்ற போதெல்லாம் ஒரு வகுப்பில் உள்ள ஆசிரியர் ஒவ்வொரு நாளும் அந்த வகுப்பில் உள்ள யாரோ ஒரு மாணவனுக்கு அடித்துக் கொண்டிருப்பதை காணுவார். அன்று ஒருநாள் இப்படியாக இவர் திடீர் விஜயம் செய்ய அந்த வகுப்பு ஆசிரியர் ஒரு மாணவனை இரு கைகளிலும் பிடித்து அலாக்காகத் தூக்கி பிரம்பினல் விளாசு விளாசு என்று விளாசிக் கொண்டிருந்தார். இதனைக் கண்ட ஆத்மஜோதி ஆசிரியருக்கும் பொறுக்கவில்லை. அன்பு மணி என்று கவியோகி சுத்தானந்தபாரதியாரால் அழைக்கப்பட்டவராற்றே. அந்த ஆசிரியர் அந்தப் பாடம் ஒழிந்த பின் அடுத்த வகுப்பிற்குச் செல்ல இவர் அந்த அடிவாங்கின மாணவனிடம் கேட்டாராம். நான் இந்தப் பக்கத்தால் வாற நேரம் எல்லாம் அவர் உங்களைப் போட்டு அடிக்கிறதைத் தான் காணக் கூடியதாய் இருக்கின்றது. படிப்பிக்கிறதாய்க் காணவில்லை. உங்களுக்கேன் அடிக்கின்றார். உங்களுக்குப் பிழை செய்யாமல் இருக்கத் தெரியாதா என்று.

இதற்கு ஒருமாணவன் எழுந்து சொன்னனும் "சேர், அந்த வாத்தியார் உங்களைக் கண்டாத்தான் எங்களைப்பிடித்து அடிக்கிறவர். மற்றும்படிக்கு அவர் படிப்பிக்கிறதும் இல்லை. அடிக்கிறதும் இல்லை" என்றானாம். இதைக் கேட்ட அன்பு மணி அசையாமணியாகி விட்டார். பின் ஆசிரியர்களுக்கான கூட்டத்தில் அந்த ஆசிரியர் செய்த சில்லறைச் சேட்டையைக் கூறி சின்னவர்கள் என்று மாணவர்களை நினைத்து அவர்கள் முன் எத்தனை பெரிய தவறை இந்த ஆசிரியர் இழைத்துள்ளார். இவருடைய பிழையை எவ்வளவு கருத்தாக கவனித்து அந்த சின்ன உள்ளம் சொல்லுகின்றது. அவர்கள் சின்னவர்கள் தானே என்று அவர்கள் முன் பிழையாக ஏதேனும் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடாதீர்கள். அவர்கள் தான் நாளைய பெரியோர்கள். இந்த சிறிய மாணவ மணிகளிடம் நாம் கற்பதற்கு நிறைய இருக்கின்றது. ஆசிரிய உலகம் தான் நாட்டினது சுவாசம் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் உளம் கொள்ள வேண்டும் என்று ஒரு நற்சிந்தனையை வழங்கினார். அந்த ஆசிரியரும் தன் பிழையை உணர்ந்து கற்பித்தல் துறையில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கத் தொடங்கினாராம். பெரியோர் வார்த்தை அமிர்தம் என்ற சொல் வயதைக் கொண்டு உருவாகியது அல்ல என்பது இந்தச் சிறுவனின் செயலால் விளக்கம்.

வானுயர் தோற்றம் எவன் செய்யுந்த தன்னெஞ்சந்
தானறி குற்றப்படின்

என்ற குறள் சொல்லும் விளக்கம், தான் செய்யும் குற்றம் மனதையுறுத்தும் போது வெளிவேடத்தில் எவ்விதமான பயன் ஒன்றும் இல்லை என்பதாம். இந்தக் குறள் இப்படியான ஆசியார்களுக்கு பொருத்தமான குறளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

1989 ஜனாதிபதி தேர்தலின் போது ஜேவிபி கடைப்பிடித்த உபாயம் இரட்டை வேடம் பூணும் உபாயமாகும். தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூறியது. அத்துடன் தேர்தலைச் சீர்குலைப்பதற்காக வன்முறைகளில் ஈடுபட்டதன் மூலம் வன்முறையைப் பாவித்து தேர்தல் வேலைகளில் ஈடுபடக்கூடிய சக்தியாகவிருந்த யூ.என்.பிக்கு வன்முறையை ஆயுதமாககப் பாவித்து தேர்தலில் வெற்றி பெற அவகாசம் அளித்தது. ஜேவிபி தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கூறியபோதிலும் குறைந்த வாக்குகள் பாவிக்கப்பட்டு பிரேமதாச வெற்றி பெறுவது அவசியம் என எண்ணியது. இதற்குக் காரணம் முதலாவதாக மக்களின் வெறுப்புக்குள்ளாகியிருக்கும் அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வருவதன் மூலம் அது விரைவில் மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதற்கு இடமுண்டு. இரண்டாவதாக குறைந்த வாக்குப் பதிவு மூலம் பிரேமதாச வெற்றி பெறும்போது அவ்வெற்றி எவ்விதத்திலும் நாகரீகமான வெற்றியாக அமையமாட்டாது. தாம் அதிகாரத்துக்கு வருவதற்காக இவ் இரண்டையும் பெருமளவில் பாவிக்கலாம் என ஜே.வி.பி. எண்ணியது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் அது புதிய அரசாங்கமாக இருக்கும் மக்களும் புதிய எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வர். இதனால் ஜேவிபிக்கு கிடைக்கவிருக்கும் ஆதரவு குறைவதற்கும் ஜேவிபி பெலவீனமடைவதற்கும் அவ்வாறே இப் புதிய அரசாங்கத்தால் ஜேவிபியை இலகுவாக அடக்க முடியும் எனவும் ஜேவிபி எண்ணியது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தால் விரக்திக்குள்ளாகும், அனேக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் தம்மைச் சுற்றி அணிதிரள்வர் எனவும் ஜேவிபி எண்ணியது. இதன்படி 1988 ஜனாதிபதி தேர்தலின்போது தேர்தலைப் பகிஷ்கரிப்பதும் குறைந்த வாக்குப் பதிவுடன் பிரேமதாசவை வெற்றியடையச் செய்வதுமே ஜேவிபியின் உபாயமாகவிருந்தது. ஆனால் ஜேவிபியின் உபாயம் வெற்றியடைந்த போதிலும் நோக்கம் பூரண தோல்வியைத் தழுவிக் கொண்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றிருந்தாலும் ஜேவிபியின் தலைவிதியில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என எண்ண முடியவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜேவிபியை அடக்கும் கொள்கையைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு பாதை ஏதும் இருக்கவில்லை. ஆதலால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியின் கீழும் ஜேவிபி பாரதூரமான தோல்விக்கே முகங்கொடுக்க நேரிட்டிருக்கும் "தெருவில் நின்றால் நீ இறப்பாய்- வீட்டுக்குச் சென்றால் மனைவி இறப்பாள்" என்ற நிலமையிலேயே ஜேவிபி இருந்தது. அவ்வாறான நிலமையின் கீழ் அது சூதாட்டத்திலேயே ஈடுபட்டது. பிரேமதாச பதவிக்கு வந்ததனால் ஏதோ ஒருவித எதிர்பார்ப்பைக் கொண்டிருக்க அதனால் முடிந்தது. இதற்கு பொருத்தமான உபாயத்தை அது தேர்ந்தெடுத்தது. ஆனால் சூதாட்டத்தில் ஜேவிபி அடைந்ததோ பெரும் தோல்வியையேயாகும். பிரேமதாச அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டான்.

ஜேவிபி கடைப்பிடித்த உபாயங்களைப் பார்க்கும்போது அவ் உபாயங்களில் அனேகமானவை என்றைக்குமே பாட்டாளிவர்க்க புரட்சிகரக் கட்சியால் பின்பற்றியிருக்க முடியாதவை என்பதை தெளிவாகக் கூறமுடியும். ஆனால் தாம் பாட்டாளிவர்க்க புரட்சிகரக் கட்சி என்றே ஜேவிபி எப்பொழுதும் தம்மை அறிமுகப்படுத்தியது.

**ஜேவிபி யின் ஆயுத நடவடிக்கைகள்:**

எவ்வாறாயினும் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுதலே சமூகப்புரட்சி என எண்ணிய ஜேவிபி தமது ஆயுத நடவடிக்கைகளைத் தயார் படுத்தியதும் அதற்கு ஏற்பவேயாகும். ஆயுத போராட்ட பாதையை இருதடவைகள் பின்பற்றிய ஜேவிபியின் அவ் இரு ஆயுத நடவடிக்கைகளும் இருவகைப் பட்டதாகவிருந்தன. முதலாவது ஆயுத நடவடிக்கை 1971 கிளர்ச்சியின் போதும் இரண்டாவது ஆயுத நடவடிக்கை 1986-89 காலத்திலம் செயல்படுத்தப்பட்டது.

ஒரே இரவில் ஒரே நேரத்தில் நாடுபூராவும் உள்ள பொலீஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் தொடுத்து அதிகாரத்தைக் கைப்பற்றுதலே 1971ன் ஆயுத நடவடிக்கையாகவிருந்தது. இது மிகவும் எளிதான நடவடிக்கையாக விருந்தது. இரகசியமாக திடீரென தொடுக்கும் அவ்வாறான தாக்குதல் மூலமாக எதிரியை இலகுவாக தோற்கடித்து அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என அன்று ஜேவிபி எண்ணியது.

1971 கிளர்ச்சி தோல்வி அடைந்ததன் பின்னர் பின்வாங்கும் நடவடிக்கையும் இடம் பெற்றது ஜேவிபி ஏற்கனவே போட்டிருந்த திட்டத்திற்கு அமைய அல்ல. போராட்டம் தோல்வியைத் தழுவிய பின்னரும் போராட்டத்தை கைவிடாமல் முன்னெடுக்கவேண்டும் என திடசங்கற்பம் பூண்டவர்கள் அச்சந்தர்ப்பத்திற்கு உகந்தது என எண்ணி செயல் பட்டதன் விளைவாகவே

வசந்த திசாநாயக,
பற்றிக் பெர்னண்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ.லோகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின்வாங்கலும் இடம் பெற்றது. ஆதலால் பின்வாங்கல் ஒழுங்கற்ற முறையிலேயே இடம் பெற்றது. ஆயுதப் போராட்டத்துடன் விளையாடியதே ஜேவிபி 1971ல் செய்ததாகும் அது தோல்வியில் முடிவு பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகியது. ஆகக் கூடியது சிறிது காலம் தக்க வைத்திருப்பதே அதனுல் செய்யக்கூடியதாக விருந்திருக்கும்.

இரண்டாவது ஆயுத நடவடிக்கை 71 உடன் ஒப்பு நோக்கும் போது ஓரளவுக்கு நீடித்த காலத்தைக் கொண்டதாகவிருந்தது. 1971 ஜப் போலன்றி 86-89ன் ஆயுத நடவடிக்கைகள் பல கட்டங்களைக் கொண்டு செயல்படுத்தப் பட்டதை காண முடிகிறது முதலாவது கட்டம் வெறுமனே தனி நபர் பயங்கரவாதம் மூலமாக எதிர் தரப்பு சக்திகளை மௌனமாக்குதலாகும். தனிநபர் பயங்கரவாத தாக்குதல்கள் சிவில் நபர்ககள் மீதே தொடுக்கப்பட்டன. இக் கட்டத்தில் இராணுவத்தினர், பொலீசார், பொலீஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படவில்லை. அரசாங்க நிறுவனங்களில் கொள்ளையடிக்கப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் சிவில் நபர்கள் மீதான தாக்குதல் அதிகரிக்கப்பட்டது. இராணுவ முகாம், பொலீஸ் நிலையங்கள் மீதும் இராணுவத்தினர் பொலீசார் மீதும் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த மற்ற தலைவர்கள் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இக் கட்டத்தின்போது இராணுவ முகாம் பொலீஸ் நிலையம், இராணுவத்தினர் பொலீசார் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது பிரதானமாக ஆயுதங்களைப் பெறுவதற்காகவேயாகும் ஆயுத நடவடிக்கையின் மூன்ருவது கட்டத்தின்போது தமது சக்தியை காட்சிப் பொருளாக்கவும் அதன் மூலமாக ஆட்சியாளர் மத்தியில் மானசீகரீதியான வீழ்ச்சியை ஏற்படுத்துதலும், மக்கள் சக்தியை பரந்த ரீதியில் தம்மைச் சுற்றி அணி திரட்டுதலும் என்னும் அடிப்படையிலேயே செயல்படுத்தப்பட்டது. தேசபக்த ஆயுதப் படையணியின் இணைந்த தலைமையம் போன்றவை இக்கட்டத்திலேயே பிரகடனப் படுத்தப்பட்டன. உண்மையிலேயே இக்காலகட்டத்தில் பலப்பரீட்சை நிலமையே நாட்டில் காட்சியளித்தது. நாட்டுள் இரு அரசாங்கங்கள் செயல்படும் நிலமை ஏற்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பிரதிநிதிகளைவிட ஜேவிபியின் பிரதிநிதிகளுக்கு மக்கள் கீழ்ப்பணியும் நிலைமையையே காணக் கூடியதாகவிருந்தது.

நிச்சயமாக ஜேவிபி ஆட்சிக்குவரும் என்றே அனேகர் எண்ணினர். பலவேறுபட்ட சக்திகளும் ஜேவிபியைச் சுற்றி அணிதிரள்வதைக் காணக் கூடியதாகவிருந்தது. ஆட்சி அதிகாரத்தைப் பெறுவது அண்மிப்பதால் ஜேவிபியினரும் மென்மேலும் மகிழ்ச்சிக்குள்ளாக்கினர். இந்நிலமையின் கீழேயே ஆயுத நடவடிக்கையின் அடுத்த கட்டம் ஆரம்பமாகிறது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் முதலாவது வேட்டாக ஆயுதப்படைகளில் பொலிசில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் சேவையிலிருந்து விலகவேண்டும் அவ்வாறு விலகாதவர்களது குடும்ப அங்கத்தவர்கள் கூட சித்திரவதைக்குள்ளாக்கப்படுவர் என பிரகடனப் படுத்தப்பட்டது. இப் பிரகடனத்துக்கு அமைய செயல்படவும் தொடங்கினர். உண்மையான "போர்" ஆரம்பித்தது இதிலிருந்துதான் ஜேவிபியின் நடவடிக்கைகளை குள்ளமாக்கிக்கொண்டு அரசு இயந்திரத்தின் தாக்குதல்கள் ஆரம்பமாகின. ஜேவிபியின் ஆயுத நடவடிக்கைகளின் "மகோன்னதம்" அனைத்தும் உதிர்வதற்கு இரண்டு மூன்று காலமே சென்றது. 71 உடன் ஒப்பு நோக்கும் போது ஓரளவு நீண்ட காலம் தாக்குப்பிடித்த ஜே.வி.பியின் இரண்டாவது ஆயுத நடவடிக்கை இவ்வாறு தோல்வியில் முடிந்தது. ஜே.வி.பி இத்தடவையும் கிளர்ச்சியுடன் விளையாடியது.

ஜே.வி.பி பாட்டாளி வர்க்க கட்சி அல்லாத போதிலும் கீழ் மட்ட வர்க்கங்களே சார்ந்த ஒடுக்கப்பட்ட வர்க்க அமைப்பாகும். இவ்வாருன அமைப்பு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற கிளர்ச்சி செய்தாலும் அது இலகுவான காரியம் அல்ல. இதற்காக கடினமாக உழைக்க வேண்டும். தொழிலாளர் வர்க்கம் உட்பட ஒடுக்கப்பட்ட வர்க்கங்களே சார்ந்த பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற வேண்டும். அது பலவந்தமாகவும் பீதியை ஏற்படுத்தியும் செய்யக் கூடியதல்ல. சுயவிருப்பத்துடன் ஆதரவு வழங்க வேண்டும். பரந்து பட்ட மக்கள் செயற்பாட்டை அத்திவாரமாக கொள்ள வேண்டும். அவ்வாறு அன்றி கிளர்ச்சி வெற்றி பெறுவது இலகுவானதல்ல.

தொடரும்

# ஆடை ஏற்றுமதியை அதிகரிக்க முயற்சி

அமெரிக்காவுக்கு தைக்கப்பட்ட ஆடைகள் ஏற்றுமதி செய்வதற்கான கோட்டாவை அதிகரிக்கும்படி கோருவதற்காக இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி.குணரத்தின வாஷிங்டன் வருகிருர். வருடாந்தம் 1.3 பில்லியன் டொலர்கள் வருமானம் தரும் இந்த ஏற்றுமதியை அதிகரிக்குமாறு இலங்கை அமெரிக்காவைக் கோரும்.

பிரேமதாசவின் 200 தொழிற்சாலே திட்டத்தின் கீழ் திட்டமிடப்படாமல் ஆடை உற்பத்தி துறை விரிவுபடுத்தப்பட்டதால் தேவைக்கு அதிகமாக ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இலங்கையின் வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்தில் பாதி ஆடை உற்பத்தியிலேயே கிடைக்கிறது. இந்த துறையில் இரண்டரை லட்சம் பேர் வேலே செய்கின்றனர். கடந்த வருடம் முதல் பத்து மாதங்களில் 1.2 பில்லியன் டொலருக்கு ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இலங்கையில் தற்போது 750 ஆடை தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. இவை 362 மில்லியன் உடைகளே ஏற்றுமதி செய்கின்றன. அமெரிக்கா ஆடை இறக்குமதி செய்யும் நாடுகளில் இலங்கை பத்தாம் இடத்தில் உள்ளது.

சில ஏற்றுமதியாளர்கள் அதிகமாக ஏற்றுமதி செய்ததால் சென்ற வருடம் அமெரிக்க தடை விதிக்க முயன்ற போது இலங்கை மன்னிப்புக் கோரியதால் தடை நீக்கப்பட்டது. ஐ.தே.க அரசில் அரசாங்கம் சில நிறுவனங்களுக்கு சலுகை வழங்கியதால் மற்றவை வியாபாரம் இன்றி பாதிக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்னணு செய்தித்தாள்

## ஓர் அறிமுகம் (2)

### மாலன்

டெலிடேக்ஸ்ட் வீடியோ டெக்ஸ் ஆகியவற்றின் முன்னோடி அமெரிக்கா அல்ல, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகள்தான். மோட்டார் வண்டிகளின் தந்தை என் ஹென்றி போர்டை சொல்வதைப் போல் மின்னணு செய்தியலின் தந்தை என்று ஒருவரை குறிப்பிட வேண்டுமானால் சாம் பெடியா என்ற ஆங்கிலேயரைத் தான் சொல்லவேண்டும். இவர் இங்கிலாந்து தொலைத்தொடர்பு ஆராய்ச்சி பிரிவில் பணியாற்றி வந்தவர். 1971ம் ஆண்டு பிரஸ்டெல் என்ற ஒரு முறையை உருவாக்கினார். 1976ல் அது லண்டனிலும் மற்ற ஐரோப்பிய நகரங்களிலும் சோதனையளவில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. 1979ல் இங்கிலாந்தில் பொதுமக்கள் உபயோகத்திற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. எண்பதுகளின் மத்தியில் இது ஜலதோசம் போல் பரவி இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் இதைப் பயன்படுத்தத் துவங்கினார்கள். அது தான் உலகின் முதல் வீடியோடெக்ஸ்ட். டெலிடெக்ஸ்டைப் பொறுத்தவரையில் இங்கிலாந்தில் இரண்டு சிஸ்டங்கள் மிகவும் பிரபலமாக இருக்கின்றன. ஒன்று Ceefex இது பிபிசிக்கு சொந்தமானது. இன்னொன்று இண்டிபெண்டன்ட் டெலிவிஷன் நிறுவனத்திற்கு சொந்தமான ஓராகிள். துவக்கம் இங்கிலாந்தில் இருந்தாலும் இந்த முறைகள் பிரமிக்கத்தக்க வகையில் வெற்றிகண்டது பிரான்ஸ் நாட்டில்தான். நாடு முழுக்க பரவியிருந்த தனது தொலைபேசி சேவையின் ஒரு பகுதியாக பிரான்ஸ் இந்த மின்னணு செய்திப் பரிமாற்றத்தை வழங்கியது. பிரான்ஸ் உருவாக்கிய வீடியோ டெக்ஸ்ட் முறைக்கு மினிடெல் என்று பெயர். மினிடெல் வாடிக்கையாளர்களுக்கு ஒரு ஒன்பது அங்குல திரையுள்ள கறுப்பு வெள்ளை தொலைக்காட்சி பெட்டியும் (பின்னர் அது 11 அங்குல வண்ணத் தொலைக்காட்சியாக மாற்றப்பட்டது) உள்ளங்கையில் வைத்துக் கொள்ளக்கூடிய விசைப்பலகையும் 1200/75 மோடமும் கொடுக்கப்பட்டது. பொதுத் தொலைபேசி கூண்டுகள் போல பொது மினிடெல் கூண்டுகள் அமைக்கப்பட்டன. 1980 ல் பத்து லட்சம் பேர் அதைப் பயன்படுத்தி வந்தார்கள். 1985ல் ஒரு கணக்கீடு நடத்தப்பட்டது. இரண்டு மாத காலத்தில் ஒருகோடி ஐம்பது லட்சம் முறை இந்த மக்கள் இந்த சாதனத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள் என அது தெரிவிக்கிறது.

ஆனால் மின்னணு செய்தியியல் முயற்சிகளுக்கு பணத்தை தண்ணீராக செலவழித்தது அமெரிக்காதான். அமெரிக்காவில் தென்கோடி மாநிலமான ப்ளோரிடோவில் நைட் ரைடர் என்ற செய்தி ஸ்தாபனம் வேறு சிலரை பங்குதாரர்களாக சேர்த்துக்கொண்டு வியூட்ரான் என்ற முயற்சியை மேற்கொண்டது. எடி அண்ட் டி என்ற தொலைபேசி நிறுவனம் இதற்கு தேவையான தொலைக்காட்சிப் பெட்டிகளை தயாரித்து விற்பனை செய்தது. 60 டாலரில் இருந்து 900 டாலர் வரை வெவ்வேறு விதமான பெட்டிகள் வழங்கப்பட்டன. மாதம் 21 டாலர் பணம் கட்டினால் பல்வேறுபட்ட 750 துறைகளின் செய்தி உங்களுக்கு கிடைக்கும். ஆனால் இதற்கு அத்தனை உற்சாகமான வரவேற்பு இல்லை. அமெரிக்கா நெடுகிலும் இருந்து இதற்கு சந்தா கட்டியவர்கள் 3,000 பேர்தான். 1984ம் ஆண்டு நைட்ரைடர் நிறுவனம் இதற்கு செலவழித்த தொகை ஒன்றரை கோடி டாலர் (சுமார் 45 கோடி) மூவாயிரம் சந்தாதாரர்கள் மூலம் அதற்கு கிடைத்த மொத்த சந்தாத் தொகையோ 7,56,000 டாலர்தான். 1958 ல் வியூட்ரான் கடையை கட்டிவிட்டது.

ஆனால் முயற்சிகள் அதோடு நின்றுவிடவில்லை அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள லாஸ் ஏஞ்செல்சில் டைம்ஸ் மிரர் என்ற பத்திரிகை நிறுவனம் கேட்வே என்ற முயற்சியில் இறங்கியது. மூன்று கோடி டாலர்கள் செலவழித்த பிறகு அதுவும் தன்னுடைய சேவையை நிறுத்திக் கொண்டது.

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத அமெரிக்கர்கள் அத்தோடு விடுவதாக இல்லை. சிகாகோ நகரில் சிகாகோ சன் டைம்ஸ் என்ற நாளிதழும் சென்டெல் என்ற தொலைபேசி நிறுவனமும் இணைந்து கீ காம் என்ற சேவையை துவக்கின அதற்குப் பிறகு ஐ.பி.எம். என்ற கணிப்பொறி நிறுவனமும் சியர்ஸ் என்ற அங்காடி தொடர் நிறுவனமும் சி.பி.எஸ். என்ற ஒளிபரப்பு நிறுவனமும் சேர்ந்து டிரின்டெக்ஸ் என்ற சேவையை ஆரம்பித்தன. நாளடைவில் சி.பி.எஸ். இதிலிருந்து விலகிக் கொள்ள இது பிராடிஜி என்ற சேவையாக இப்போதும் இருந்து வருகிறது.

நாம் இதுவரை குறிப்பிட முயற்சிகளெல்லாம் எழுபதுகளின் மத்தியில் தோன்றி 1985 வரை நடந்த முயற்சிகள், ஆனால் இந்த காலகட்டத்திற்கு பிறகு மின்னணு செய்தியியல் அதன் ஆரம்பகால தடுமாற்றங்களில் இருந்து விடுபட்டு கொஞ்சம் கொஞ்சமாக நிலைபெற்று வருகிறது. இதற்கு சொந்த கம்யூட்டர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஒரு காரணம் நெட்வொர்க் என்று சொல்லப்படும் தொடர்பு வலைகள் பல்கிப் பெருகியது மற்றொரு காரணம்.

சொந்த கம்யூட்டர்களை செய்தி பரிமாற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்வதுதான் மின்னணு செய்தியியலின் அடிப்படை அம்சம் ஒரு சொந்த கம்பியூட்டரை இன்னொரு கம்யூட்டருடன் பிணைந்து வைத்திருக்கும் நிலையை ஆன்லைன் என்று சொல்கிறோம் இந்த தொழில் நுட்பத்தின் விளைவாக பல வகையான பரிமாற்றங்கள் நடை பெற்று வருகின்றன.

கம்யூட்டர்களுக்கு இடையே தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாத்தியமானதால் முன்பு சொன்னதைப் போல தகவல்கள், பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள், மெண்பொருள் பரிமாற்றங்கள், பொருட்களை வாங்குவது, விற்பது ஆகியவையும் கம்யூட்டர் மூலம் நடைபெறுவது சாத்தியமாயிற்று. வர்த்தக ரீதியாகத் தகவல்களை பெறுவதற்காகப் பலவித சேவைகள் உருவாக்கப்பட்டன.

அவற்றில் பழமையானது காம்ப்யூசெர்வ் வர்த்தக ரீதியில் அல்லாமல் இந்த வசதிகளைத் தரும் சேவை அறிவிப்புப் பலகை முறை.

1978ல் உலகில் ஒரேயொரு புல்லடின் போர்டு சிஸ்டம் தான் இருந்தது. ஆனால் இன்று அமெரிக்கா முழுவதிலும் சுமார் ஒரு லட்சம் புல்லடின் போர்டு சிஸ்டம் இருக்கின்றன அவற்றில் 25,000 நம்முடைய பொதுத் தொலைபேசி கூண்டுபோல, பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக வீதி ஓரங்களில் அமைந்திருக்கின்றன. பம்பாய் போன்ற நகரங்களில் கூட பிபிஎஸ் வநது விட்டதாக அறிகிறேன். பிபிஎஸ் இன் வெற்றிக் காரணம் அதை உருவாக்குவது மிக எளிது. தேவைப்படும் மென்பொருளை கம்ப்யூட்டரில் பொருத்திக் கொண்டால் போதும்.

வர்த்தக ரீதியாக பயன்படும் சேவை காம்பயூசெர்வ் பிராடிஜி அமெரிக்கா ஆன்லைன் மற்றும் பல. காம்ப்யூசெர்வ் முதலில் பங்கு மார்க்கெட் நிலவரம் தெரிந்து கொள்வதற்காக உருவானது. இன்னும் அமெரிக்காவில் பங்கு மார்க்கெட் நிலவரம் தெரிந்து கொள்வதற்று இதுதான் மிகவும் விரைவான நம்பகமான சேவை.

பிராடிஜி என்பது ஐ.பி.எம் நிறுவனமும் சியர்ஸ் என்ற பெரிய சில்லறை கடைக்காக உருவானது. இன்னும் அமெரிக்காவில் பங்கு மார்க்கெட் நிலவரம் தெரிந்து கொள்வதற்கு இதுதான் மிகவும் விரைவான நம்பகமான சேவை.

பிராடிஜி என்பது ஐ.பி.எம் நிறுவனமும் சியர்ஸ் என்ற பெரிய சில்லரை கடை தொடர் நிறுவனமும் கூட்டாக இணைந்து துவக்கிய சேவை காம்ப்யூர்செர்வை விட பிராடிஜி ஒரு வகையில் முன்னேற்றம் அடைந்த சேவை. காம்ப்யூசெர்வில் வரிவடிவங்களை மாத்திரம்தான் அனுப்பமுடியும். பிராடிஜியில் சித்திரங்களையும் அனுப்பமுடியும். ஜினி என்பது ஜெனரல் எலெக்ட்ரானிக் நெட்வொர்க் பார் இன்பர்மேஷன் எக்ஸ்சேஞ் என்பதின் சுருக்கம். இது அமெரிக்காவின் மிகப்பெரிய வர்த்தக நிறுவனங்களுள் ஒன்றான ஜெனரல் எலக்ட்ரிக் என்ற நிறுவனத்திற்கு சொந்தமானது. ஏறத்தாழ காம்ப்யூசெர்வ் போலவே வடிவமைக்கப்பட்டது.

கம்பியுட்டர்களிடையே செய்திப் பரிமாற்றத்திற்கு தொலைபேசி தொடர்பு பாதை பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று முன்பு குறிப்பிட்டிருந்தேன். இப்போது முன்பு போல கம்பிகளின் வழியே மாத்திரம் தொலைபேசி செய்திப்பாதை அமைந்திருப்பது இல்லை.

செயற்கை கோள்கள் மூலம் செய்திகள் அனுப்பப்படுகின்றன. நெட்டப்பாக்கத்தில் இருந்து அமெரிக்காவில் உள்ள நப்ராஸ்டிகாவுக்கு நீங்கள் பேசுவது செயற்கைக்கோள் பாதை வழிதான். தொலைபேசி பாதை விரிவடைந்ததும் அதைப் பயன்படுத்தி கம்யூட்டர்களிடையே நடக்கும் செய்திப் பரிமாற்றமும் விரிவடைந்து உலகு தழுவிய செய்தி வலைப்பின்னல் ஏற்பட்டது.

ப்ளோரிடா பல்கலைக் கழகம் ஒரு மின்னணு செய்தித்தாளை வெளியிடுவதென தீர்மானித்தது. உலகிலேயே ஒரு பல்கலைக்க கழகம் ஆன்லைன் நாளிதழ் நடத்துவது இதுதான் முதல் முறை. அதற்கு ஒரு முன்மாதிரி உருவாக்கும் பணியில் ஈடுபட எனக்கு வாய்ப்பு கிடைத்தது. மூன்று குழுக்கள் மூன்றுவிதமாக அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டு மூன்று முன்மாதிரிகளை உருவாக்க முயன்றன. பிபிஎஸ் எனப்படும் அறிவிப்புப் பலகை முறையை பயன்படுத்தி ஒரு குழு வேலை செய்தது. பிராடிஜீ என்ற ஆன்லைன், சேவையைப் பயன்படுத்தி ஒரு குழு பணியாற்றியது.

Wordwide web என்ற உலகு. தழுவிய செய்தி வலையை சார்ந்து ஒரு முன்மாதிரியை உருவாக்க எங்களுடைய குழு முயன்றது. உயர்சக்தி இயற்பியலில் ஆய்வு செய்யும் ஐரோப்பிய ஆராச்சியாளர்கள் சேர்ந்து செர்ன் என்ற ஒரு அமைப்பை நடத்தி வருகிறார்கள் இந்த அமைப்பைச் சேர்ந்த டிம் பெர்னர்ஸ் வீ என்பவரின் முயற்சியால் 1989ம் வருடம் மார்ச் மாதம் உருவானது 'வெப்' ஐரோப்பாவின் பல நாடுகளில் சிதறிக் கிடக்கும் ஆராய்ச்சியாளர்கள் தங்களுக்குள் தகவல்களை பரிமாறிக் கொள்ள முதலில் இது உருவானது. இப்போது இன்டர்நெட் என்ற தொடர்பு வலை மூலம் இதை அணுகமுடியும்.

இன்டர்நெட் என்பது உலகிலேயே மிக பிரமாண்டமான தொடர்பு வலை. 50 நாடுகளில் உள்ள ஒன்றரை கோடி பேர் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

சுருக்கமாகச்சொன்னால் பி.பி.எஸ் உள்ளூர் முறை. பிராடிஜீ நாடு தழுவியது எங்களுடையது உலகு தழுவியது. Wide Area Hypermedia, information retrieval initiative aiming to give universal access to a large universe of documents என்பது இந்த Worldwide Web ன் (சுருக்கமாக றுறுறு அல்லது WEB அதிகாரபூர்வ வர்ணனே) இதை தமிழில் சொல்வதானால் செய்தி என்னும் பிரபஞ்சத்தை உலகின் எந்த மூலையில் இருந்தும் அணுகுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பரந்த ஹைபர்மீடியா முயற்சி.

ஹைபர்மீடியோ என்றால் என்ன? கம்ப்யூட்டரில் துணை கொண்டு நாம் எழுதும் ஒரு ஆவணத்தை அல்லது செய்திக் குறிப்பை டெக்ஸ்ட் என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். உதாரணமாக அறிவியல் பேரவையின் மூன்றாம் கருத்தரங்கம் புதுவையின் துவங்கியது. புதுவை மத்திய பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் ஞானம் தலைமை உரை நிகழ்த்திஞர். ஒரு ஆவணத்தை அல்லது செய்திக் குறிப்பை டெக்ஸ்ட் என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். புதுவை மத்திய பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் ஞானம் தலைமை உரை நிகழ்த்தினார் என்று கம்யூட்டரில் எழுதுவதும் டெக்ஸ்ட் இந்த டெக்ஸ்ட்டில் உள்ள வார்த்தையை அதனோடு தொடர்புடைய இன்னொரு ஆவணத்துடன் பிணைந்து பதித்து வைத்துக்கொள்வது ஹைபர்டெக்ஸ்ட். எடுத்துக் காட்டாக குறிப்பிட்டுள்ள உதாரணத்தில் டாக்டர் ஞானம் தலைமை உரையாற்றினார் என்ற வரியில் உள்ள தலைமை உரை என்ற வார்த்தையை அவரது முழு உரையைக் கொண்ட ஆவணத்துடன் பிணைத்து விட்டால் மேலே கூறிய எடுத்துக்காட்டு ஹைபர்டெக்ஸ்டாகி விடும்.

அது திரையில் தோன்றும்போது தலைமை உரை என்ற சொற்கள் மாத்திரம் வேறு ஒரு வண்ணத்தில் தோன்றும். கம்யூட்டரின் மௌஸைப் பயன்படுத்தி (அல்லது உங்கள் விரலால்) தொட்டால் அவரது முழு உரையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நமக்கு கிடைக்கும். இதுதான் ஹைபர்டெக்ஸ்ட்.

ஹைபர்மீடியா என்பது ஹைபர்டெக்ஸ்டைப் போன்றதே. ஒரே ஒரு வித்தியாசம் ஹைபர்டெக்ஸ்டில் வரி வடிவங்களை பிணைக்கிறோம். ஹைபர்மீடியாவில் வேறுஒரு மீடியத்தை (ஊடகத்தை) அதாவது ஒலி, சித்திரம், காட்சிகள் போன்றவைகள் பிணைக்கலாம். இதன்மூலம் டாக்டர் ஞானம் வழங்கிய தலைமை உரையை ஹைபர்மீடியா வசதியை பயன்படுத்தி அவரது குரலிலேயே கேட்கலாம்.

வெப் என்ற செய்திவலை ஹைபர் மீடியா வகையைச் சார்ந்தது அந்த வலையை தொடர்புகொள்ள HTMIL (ஹைபர் டெக்ஸ்ட் மார்க் அப் லாங்குவேஜ்) என்ற மொழியில் எழுதப்பட்ட மொசைக் என்ற மென்பொருள் வேண்டும்.

இந்த மென்பொருள் அமெரிக்காவில் உள்ள நேஷனல் சென்டர் பார் சூப்பர் கம்ப்யூட்டிங் அப்ளிகேஷன்ஸ் என்ற நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டது. 1993ல் இது உருவாக்கப்பட்ட போது ஐ.பி.எம். கம்யூட்டர்களுக்கு ஏற்றதாகத்தான் வடிவமைக்கப்பட்டது. ஆனுல் தற்போது மைக்ரோசாப்ட் விண்டோஸ், மெகின்டாஷ் போன்ற கம்யூட்டர்களுக்கும் யூனிக்ஸின் வெவ்வேறு வடிவங்களைப் பயன்படுத்தும் கம்யூட்டர்களுக்கும் ஏற்ற விதத்தில் சீரமைக்கப்பட்டுள்ளது.

கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜான் கரேகிரேஸ்டோன் என்பவர் மின்னணு செயதித்தாளை பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். அது நடைமுறையில் வெற்றிபெற சில நிபந்தனைகளை விதிக்கிறார்.

அதுவெறும் தகவல் களஞ்சியமாக இல்லாமல் அச்சில் உள்ள செய்திதாளை போலவே உணர்ச்சி தரும்படி நடையில் நகைச்சுவையும் துணுக்குகளும் ஆங்காங்கே தெளிக்கப்பட்டு அமைந்திருக்க வேண்டும் என்பது அவற்றில் ஒன்று.

ஆனால் மின்னணு செய்தித்தாள் புதுமையாக வேண்டுமானால் இருக்குமே ஒழிய போணியாகாது என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அவர்களுள் கார்ட் பியர்ஸன் என்ற நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவரும் ஒருவர். என்னய்யா உங்கள் மின்னணு செய்தித்தாள் கோபத்தில் விசிறி அடிக்க முடியுமா? கத்தரித்து எடுத்து வைத்துக்கொள்ள முடியுமா? குடும்பம் முழுவதும் ஆளுக்கொரு பக்கமாகப் பிரித்துக்கொண்டு போய் படிக்க முடியுமா? அட சந்தைக்குப் போய் மீன் வாங்கி சுற்றி எடுத்துவரத்தான் உதவுமா? என்ற கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகும் அவர், 'குயில்பாட்டில் பாரதியார் வானுக்கு போவதெங்கே' என்று கேட்டதைப் போல, முத்தாய்ப்பாக அதை எட்டாக முடித்து ஜீன்சின் பின்புற பாக்கெட்டில் திணித்துக் கொள்ளமுடியுமா? என்று கேட்கிறார்.

ஒரு செய்திதாளுக்குத்தான் எத்தனை உபயோகங்கள்.

# யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்கள் யாழ்.விஜயம்

யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க வந்த வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை புலிகளை முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் சந்திக்க உள்ளனர். இரண்டு ஒல்லாந்துக் காரர்களும் ஒரு கனடியரும் ஒரு நோர்வேஜியரும் கொண்ட இந்தக் குழுவினர் முதலில் அரச தரப்பினரைச் சந்தித்திருந்தனர். புலிகளைச் சந்தித்த பின்னர் இவர்களின் பணி ஆரம்பிக்கும். யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் செல்லும் இவர்கள் அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் புலிகளைச் சென்று சந்திப்பார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் மொத்தம் ஆறு குழுக்கள் இயங்கும். இதில் அரச சார்பிலும் புலிகள் சார்பிலும் உறுப்பினர்கள் இருவர் இருப்பார்கள். வெளிநாட்டவர்கள் இந்தக் குழுவிற்கு தலைமை தாங்குவர்.

புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதாக இராணுவம் குற்றம் சாட்டியதை அடுத்து புலிகள் உடனடியாக தங்கள் பிரதிநிதிகளை அறிவிக்க வேண்டும் என்று சந்திரிகா கேட்டிருந்தார்.

புலிகள் தங்கள் சார்பில் ஒருவரையும் அறிவிக்காததாலேயே இந்த குழுவின் நியமனம் தாமதமாயிருந்தது.

## அறுசுவை..

கடத்தப்பட்டிருந்தால் மாவீரர்களாகியிருப்பார்கள். இவர்கள் எழுதுவதை விட, மற்றவர்களைக் கொண்டு எழுதுவது தான் கூட. தாங்கள் எழுதி வம்பில் மாட்டிக் கொள்ளாமல் 'வெண்ணிலாக்களைப்' பிடித்து உருவேற்றி விட, வெண்ணிலாவும் ஆடத் தொடங்கி வாங்கிக் கட்டும். பிறகென்ன, அமாவாசை தான்.

அப்படி எழுதுவதாக இருந்தாலும், கருணாநிதி, சிவாஜி கணேசனுக்கு பிறந்த நாள் கட்டுரை எழுதி வெளியிட்டு, அதை அவர்களுக்கும் அனுப்ப.. கருணாநிதி முரசொலியில் பிரசுரித்து கடிதம் அனுப்ப.. அதைத் தூக்கிக் கொண்டு 'தமிழ் தமிழை வாழ்த்தியிருக்கிறது' என்று அதை பத்திரிகையில் பிரசுரிக்க போக... அது மறுக்க.. இன்னொன்றில் தாவி அங்கிருந்து 'குள்ளநரி' வேலைகள் செய்து.. நண்பர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையில் மோதலைத் தூண்டும்.

கண்ணுகளா? எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். அதாவது எழுது முன்னர் எண்ணித் துணிக கருமம்.


# வெளிவந்து விட்டது இளையநிலா 8

★ இந்தியாவில் ஈழத்து அகதிகளின் பரிதாப நிலை

★ புலிகள் கருத்துச் சுதந்திரத்தை தடை செய்கிறார்களா?

★ சபாலிங்கம் கொலை

★ தேடகம் எரிப்பு

மற்றும் சுவையான அம்சங்களுடன்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# GOOD BYE BALDNESS

## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி




இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது.
தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

## ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது

**Tel:922-0478**
239 Carlton St
Toronto, Ont

# சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




**VITAMOL** சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றொபேட்டினால் தயாரிக்கப்பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD




உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.


**Universal Foods & Merchandise Co,**
**Toronto, Canada**
**(416) 535-8672**

### CHATAK: CURRY EXCELLENT




**Chatak Madras Curry Powder** இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. **Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix** போன்றனவும் கிடைக்கும்.

### DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் றொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினுல் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**BUDGET SUPERSAVINGS DISCOUNT**
**1340 Queen st west (East of lansdowne)**
**Tel:(416) 537-0394**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# carborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை




osmetic Dentistry
rown & Bridges
Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு
முன்னறிவிப்பு இன்றி
சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள்
ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம்
பெறுபவர்களுக்கும் சிகிச்சை
வழங்கப்படும்

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**
**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**
- Wheel Chair Access
- Free Parking

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப்
பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல்
செய்து கொள்ளுங்கள்)
24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 Noon-5 PM**
Sunday by appointment only
24 Hrs Emergency Service




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறு(சு)வை



# 1995ல் தடை செய்ய வேண்டிய தமிழ் சொற்கள்

அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

சில சொற்களைப் பாவிப்பதன் மூலம் தங்களுக்கும் விசயம் தெரியும் என்று எல்லோருக்கும் காட்டுவதற்காக அவற்றின் பொருளை உணர்ந்து கொள்ளாமல் பலர் பயன்படுத்துவதுண்டு என்பதைப் பற்றி சொன்னேனா.. நம்ம தமிழர்கள் பலர் தங்களுக்கு விசயம் தெரியாது என்று காட்டுவதற்காக பல சொற்களைப் பாவிப்பதுண்டு. எங்களுக்குத் தெரிந்ததே இவ்வளவும் தான், இதை விட வேறுவிதமாய் எங்களுக்குச் சிந்திக்கத் தெரியாது என்ற மாதிரி ஸ்டொக்கில் இருப்பதை திருப்ப திருப்ப றிசைக்கிள் பண்ணுவதில் தமிழன் வல்லவன். அதன் கருத்தும் தெரியாது, அதன் பிரயோகமும் தெரியாது. இந்த சொற்களை பலரும் கண்ட மாதிரி பயன்படுத்துவார்கள்.

முன்பு புலிகள் யாரையாவது கொலை செய்தால், நோட்டீஸ் ஒட்டுவார்கள்... உரிமை கோரி. துரோகி, போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர், மரண தண்டனை.. அது இது என்று. இவற்றுக்கெல்லாம் கருத்துத் தெரிந்தா அவற்றை திரும்ப திரும்ப பயன்படுத்தினார்கள்? சும்மா செய்கின்ற கொலைகளுக்கு ஒரு நியாயப்படுத்தல்.. அவ்வளவு தான். கோழி திருடியவன் அப்படி என்ன விடுதலையைக் காட்டிக் கொடுத்தான்?

அதை உரிமை கோரினால் பிரச்சனை வரும் என்றால், அவர்கள் வாயை மூடிக் கொள்ள.. வால்கள் தங்கள் பாட்டில் அது றோ செய்தது, சி.ஐ.ஏ செய்தது என்பார்கள். சி.ஐ.ஏ என்றால் என்ன தெரியுமா என்று கேட்டால்.. Criminal Investigation of America என்பார்கள்.. ஏதோ அமெரிக்க சி.ஐ.டி என்ற மாதிரி. கருத்துத் தெரியாது.. கண்ட மாதிரி பாவிப்பது. பிறகு கொஞ்ச நாளில் புலிகள் நாங்களே செய்தோம் என்றால்.. பின்பு ஆமா.. ஆமா.. தங்களை புத்திசாலிகளாய் காட்டப் போய் முட்டாள்தனத்தை வெளிக்காட்டுகின்ற கூட்டம் இது.

அதைப் போல புலம் பெயர்ந்த நாடுகளில் தொழில் நுட்பமும் வசதிகளும் நம்மவர்கள் பலரை media magnates அல்லது media barons ஆக்கி விட்டிருக்கிறது. வாசகர்களை விட எக்கச்சக்கமான பத்திரிகை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதனால் பல சொற்கள் திரும்பத் திரும்பக் கேட்டு புளித்துப் போய் விட்டது. இந்தச் சொற்களை உடனடியாக தடை செய்ய வேண்டும்.

**விருது:** ஊரில் முன்பு யாருக்காவது விருது கொடுத்ததை கண்டிருக்கிறீர்களா? மிஞ்சிப் போனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்கள். பொன்னாடை என்றதும் நாலும் பேரனாரிடம் தங்கத்தினால் செய்திருப்பார்களோ என்று ஆர்வத்துடன் விசாரிக்க.. அது வெறும் சால்வை தான். திராவிடப் பாரம்பரியத்தின் தோளில் துண்டு இப்போது முதுகைச் சுற்றி போர்வையாகும். இதுதான் அந்தக் காலத்து Hall of fame. ஒரு வெறும் குறியீடு தான். அபூர்வமாக செய்யப்பட்டதால் அதற்கும் மதிப்பு இருந்தது. பண்டிதமணிக்கு பொன்னாடை போர்த்தினார்கள் என்று ஈழநாட்டில் வந்தால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

மற்றும்படி போட்டிகளில் வென்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணம், அல்லது கேடயம். ஒஸ்கார் விருது மாதிரி சிலைகளைக் கொடுக்கும் பழக்கம் கிடையாது. இங்கே உள்ள மாதிரி பலகைத் துண்டில் ஒரு தங்க நிற இரும்புத் தகட்டில் பெயரைப் பொறித்துக் கொடுக்கும் விளையாட்டு எல்லாம் அங்கு கிடையாது. ஒரு றெஸ்ரோறன்ரில் பார்த்தேன்.. ஏதோ விளையாட்டுக் கழகம் அவர்களின் சேவையைப் பாராட்டி இப்படி விருது கொடுத்திருந்தது.

பின்னாளில் இந்த கலாசாரத்தை ஆரம்பித்து வைத்ததே 'தகவல்'காரர் தான். தெரிந்தவர், தெரியாதவர், அறிந்தவர், அறியாதவர் என்றெல்லாம் ஆளுக்காள் விருது கொடுக்கத் தொடங்கியதே அவர் தான். விருது என்றால் ஏதோ கேடயம் அப்படி எல்லாம் கிடையாது. ஒரு சிறிய ஊசியில் குத்திய விரல் நுனி சைஸில் உள்ள ஒரு விருது. அதற்கு பிரேம் போடும் அளவில் சேர்ட்டிபிக்கேட், அதை விட ஒரு போட்டோ.

அதன் பின்னால், கழகங்கள் எல்லாம் தங்கள் மலருக்கு விளம்பரம் தந்தவர்கள் முதல் கொண்டு எல்லாருக்கும் பலகைத் துண்டில் தகரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறித்து...

புலம் பெயர்ந்த தமிழன் செய்யும் கூத்துக்களைக் கண்ட புலன் பெயர்ந்த தமிழர்கள் பிறகு மாவீரர்கள், மாமனிதர்கள், மாடுகள், மாங்காய்கள் என்று எல்லாருக்கும் விருது.. அங்கே விருதை விட கொடுப்பவருக்கு அப்படி மதிப்பு.. சூடு வாங்கினாலும் ஏ.கே தூக்கிய கையால் சூடு வாங்க வேண்டும் அல்லவா!

விருது என்ற சொல்லை மட்டும் அல்ல, விருது வழங்குவதையும் தடை செய்ய வேண்டும்.

**யுத்தமுனை நிருபர்:** இங்கே பத்திரிகைகள் ஆரம்பித்ததில் இருந்து எல்லாமே செய்திக்கு மூலமாக வீரகேசரியையே

'எதையோ எழுத வேண்டும்' என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள்.
எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொண்டிருந்தன. பின்னுளில் பத்திரிகைகள் மலிந்ததும் அங்கே நிருபர்களை கொண்டிருந்தன. தமிழோசை கொழும்புப் பத்திரிகைகளில் கூட நிருபர்கள் தேவை என்று விளம்பரம் போட்டிருந்தது. (விளம்பரப் பணம் போய் சேர்வதற்குள் தமிழோசை மூடப்பட்டு விட்டது) சஞ்சயன், காண்டீபன் என்று அந்தக் காலத்தில் பாரதப் போர் நடந்த போது யுத்தத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களில் தான் இந்த யுத்த முனை நிருபர்கள் இருப்பது தான் ஆச்சரியமான விசயம். இதில் சஞ்சயன் என்ற பெயர் வரக் காரணம்.. திருதராட்டினன கண தெரியாததால அவருக்கு வீட்டில் இருந்தபடியே தன் தொலைஉணர் திறன் மூலம் யுத்தத்தின் முன்னேற்றம் பற்றி சொன்னவன் தான் இந்த சஞ்சயன்.. இந்த சஞ்சயனின் பெயரை வைத்துக் கொண்டு இங்கே சுத்தல்..

ஆனையிறவில் சண்டை நடந்து கொண்டிருந்தால் இவர்களின் நிருபர்கள் வெள்ளைக் கொடிகளை ஏந்தியபடி செய்தி சேகரித்துக் கொண்டிருக்கவா புலிகள் விட்டிருப்பார்கள்? ஆளைப் பிடித்து மவனே.. பேனை தூக்கிய ஆக்களை எல்லாம் எங்களுக்குத் தெரியும்.. இந்தா பிடி.. ஒரு ஏ.கே என்று அனுப்பியிருக்க மாட்டார்கள்?

ஆனையிறவில் யுத்த முனையிலிருந்து செய்தி அனுப்பிய சஞ்சயன் தனது செய்தியின் முடிவில்.. கொழும்பில் இராணுவ தரப்பினர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் சொல்லப்பட்டதையும் சேர்த்திருப்பார். அங்கும் இங்குமாக இவர் எங்கும் நீக்கமற நிறைந்து..

இதைப் போல தடை செய்யப்பட வேண்டிய இன்னென்று. . நமது பத்திரிகைக்கு விசேடமாகத் தெரிவித்தார் என்பது. ஏதோ செய்தி சொன்னவர், நான் வேறு எந்தப் பத்திரிகைக்கும் சொல்ல மாட்டேன், இவர்களுடைய பத்திரிகைக்குத் தான் சொல்வேன் என்று அடம் பிடித்த மாதிரி.. ஒரு செய்தி பார்த்தேன். இவர்களுடைய யுத்த முனை நிருபர் ஒருவருக்கு போன் அடித்திருக்கிருர்.. அவர் தான் களைத்துப் போயிருப்பதாகக் கூறி விட்டார். அதை வைத்து ஒரு பெரிய செய்தி.

*தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய...* இங்கே ஆட்கடத்தும் ஏஜன்சி நடத்துபவர்கள் முதல் கொண்டு பத்திரிகை நடத்துபவர்கள் வரை. கேஸ் எழுதுவோர் முதல் கொண்டு கோயில் கட்டியவர்கள் வரை தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய மட்டும தான் அவர்கள் இந்த தொழில்களில் இறங்கியிருக்கிருர்கள். மற்றும்படி காசு.. நாய் தின்னுக் காசு.. அவர்கள் அதை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். லாப நோக்கம்.. அறவே கிடையாது.

இந்த சேவை செய்கிறவர்களில் எத்தனை பேர் தங்கள் சொந்தப் பணத்தில் சேவை செய்திருக்கிருர்கள்? இப்படி சேவை செய்கிற எத்தனை பேர் அங்கேயுள்ள கஷ்டப்படும் மக்களுக்குச் சேவை செய்கிருர்கள்? அவர்களிடம் டொலர் இல்லாதபடியால் தானே. இவர்களுடைய சேவை இல்லாமல் தமிழ் மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள். அந்த கஷ்டத்தைப் போக்க இவர்கள் சேவை செய்கிருர்கள். ஆனுல்... முதலில் காசு கொடுக்கா விட்டால் கடவுளுக்கு அர்ச்சனை நடக்காது. உங்களுக்குத் தான் அர்ச்சனை நடக்கும். காசு முதல் கொடுக்கா விட்டால் கேஸ் எழுதப்படாது. காசு கொடுத்த பின்னுல் இழுத்தடிக்கப்படும்.

தெருத்தேங்காயை வழிப்பிள்ளையாருக்கும் அடித்து பொக்கட்டுக்குள்ளும் திணிக்கும் கோஷ்டி இன்னென்று.. இது தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக என்று கூறிக் கொண்டு அரசாங்கத்திடம் பணம் வாங்கி, புல்லுக்கும் பொசிய விட்டு, பொக்கட்டுக்குள்ளும் சுருட்டிக் கொள்ளும்.

*உடன் நண்டு, ரூல், மீன், கணவாய்...* இது தான் எல்லாராலும் வெறுக்கப்பட்ட சொல் தொகுப்பாக இருக்க வேண்டும். ரேடியோவைத் திறந்தால், பேப்பரைத் திறந்தால் இதைக் காணுத கடை விளம்பரம் கிடையாது. ஏதோ 'கையால் நனைத்து, கையால் இடித்து, கையால் வறுத்து, கையால் பைக்குள் அடைத்த' அரிசி மா போல, ஏதோ உடன் மீன்.. பக்கத்துக் கடலில் பிடித்த மீனை சின்னக்கடையில் வைத்து விற்கிற பெண்கள் கூட ஒரு நாளும் இப்படி உரிமை கோரியதில்லை. விசயம் தெரியாமல் 'உது இப்ப பிடிச்சதோணை' என்று கேட்டால், என்ன மொழியில் பதில் கிடைக்கும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

சைனு டவுணில் சனிக்கிழமைகளில் அமெரிக்காவிலிருந்து ஒரு பெரிய ட்ரக் ட்ரெயிலரில் தண்ணீர் தாங்கிக்குள் ஒட்சிசன் எல்லாம் விட்டு உயிர் மீன் கொண்டு வந்து விற்பார்கள். துடிக்க துடிக்க வாங்கலாம். அவர்களின் ட்ரக்கில் கூட 'உடன் நண்டு, ரூல், மீன், கணவாய்' விளம்பரத்தை நான் கண்டதில்லை. இங்கே பார்த்தால்.. வாங்கி வந்த நண்டு ரூல் மிஞ்சிப் போனுல்... பிரீஸருக்குள் வைத்து மறுநாளும் விற்கப்படும். . 'உடன் நண்டு, ரூலாக'

விளம்பரம் எழுதுவது என்பது கஷ்டமான விடயம். சுருக்கமாக இரண்டொரு வரிகளில் மனதில் நிற்கும்படி எழுத வேண்டும்.. சமீபத்தில் கேட்ட விளம்பரம்.. ஆண்களுக்கான வேட்டிகள், பெண்களுக்கான சேலைகள். . இதென்னப்பா, ஆண்கள் சேலையா கட்டுகிருர்கள்?

இன்னெரு விளம்பரத்தில் Madness sale என்பது விசர்த்தனமான மலிவு விற்பனை என்று மொழிபெயர்ந்திருந்தது. இன்னெரு விளம்பரத்தில் பத்து ரூபாய்க்கு பொருள் வாங்கினுல் ஒரு ரூபாய் பெறுமதியான பொருள் இலவசமாம். விளம்பரத்தில் இருந்தது... ஏதோ சும்மா! அதென்ன ஏதோ சும்மா! வாழ்க கற்பனை வளம். வாழ்க 'ஏதோ சும்மா' (இலவச) பத்திரிகைகள்.

*இலவசப் பத்திரிகை;* தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக பத்திரிகைகள் இலவசமாக வெளிவருகின்றன. 'சில்லறைக் காசுகளுக்கு விற்பனையானவை' இலவசமாகின்றன. இலவசமாய் வந்தவை 'சில்லறைக்கு விற்பனையாகின்றன'. எல்லா திருகுதாளங்களும் இங்கே நடக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கும். அத்தோடு தமிழ்மக்களுக்கு சேவை செய்வதும் ஒரு காரணம். காசுக்கு விற்றது இலவசமாகும் போது.. கருத்துக்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பது காரணமாகியிருக்கும். இலவசமானது காசுக்கு விற்கும் போது.. பணத்துக்கு விற்ருல் தான் அதற்கு மதிப்பிருக்கும் என்பது காரணமாகியிருக்கும். இரண்டு காரணங்களையும் தமிழ் மக்கள் ஏற்றே ஆக வேண்டும். after all, அவர்களுக்கு சேவை செய்யத்தானே இந்தப் பத்திரிகைகள்.

விற்பனையில் முன்னணியில் நிற்பது நாமே என்று எல்லாப் பத்திரிகைகளும் உரிமை கோரிக் கொள்கின்றன. (தாயகம் தவிர). அதிகம் விற்பனையாகும் பத்திரிகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிகம் விற்பனையாகிறது என்று விற்பனையாளர்கள் சொல்லும் பத்திரிகை என்றெல்லாம் உரிமை கோருகிருர்கள். இங்கே ஸ்டார் உரிமை கோரும்... Canada's Largest Newspaper என்று. குளோப் கனடாவின் தேசியப் பத்திரிகை என்று உரிமை கோரும். சண் The little paper that grew என்று உரிமை கோரும். நம்ம தமிழ் பத்திரிகைகள் தான் எல்லாமே அதிகம் விற்பனையாகும் பத்திரிகைகள். எல்லாரும்வாசிக்கிருர்கள், நீங்களும் வாசியுங்கள் என்பதற்காக அல்ல, எல்லாரும் படிக்கிருர்கள், எனவே எங்கள் பத்திரிகையில் விளம்பரம் போடுங்கள் என்று தான். போடுகின்ற விளம்பரங்களும் 'உடன் நண்டு, ருல், மீன்'..

*மண்மீட்பு+ அகதிகள் புனர்வாழ்வு;* புலிகள் பணம் சேர்ப்பதற்கு காலத்திற்கு காலம் ஒவ்வொரு கோஷங்கள். . ஏவுகணை வாங்க, மண் மீட்க.. மண் மீட்பு நிதி என்று சொல்லி கொஞ்சக் காலம் வாங்கினுர்கள். இப்போது பேச்சுவார்த்தை நடக்கிறது. எனவே மண் மீட்பு என்று சொல்ல முடியாது. எனவே அகதிகள் புனர்வாழ்வு.. நாங்கள் இங்கே வந்ததே அகதிகளாக.. அதற்குள் இந்த அகதிகளிடம் புனர்வாழ்வு என்று சொல்லி பணம் திரட்டல்.. அங்கே எத்தனை முகாம்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.. மண் மீட்பு.. யாரிடமிருந்து மண்ணை மீட்பது?

*தேசியத் தலைவர்;* பிரபாகரனின் படத்தைப் போட்டால் அதற்கு கீழ் தேசியத் தலைவர் என்று போடா விட்டால் உலகத்தமிழருக்கு தூக்கம் வராது. தமிழ் தேசியத் தலைவரா? ஈழத்தேசியத் தலைவரா? என்பது யாருக்கும் தெரியாது. தமிழ் தேசியத் தலைவராக இருந்தால் தன்னை மட்ராஸி என்று பெருமை கொண்டு என்னேடு நெருக்கமாய் இருக்கும் கயாணுக்கார நண்பனுக்கு தலைவரின் படம் கொண்ட கலண்டரை கொடுப்பதாக உத்தேசம். தன்னுடைய தலைவரின் படத்தை அவன் வீட்டில் மாட்ட வேண்டாமா?

ஹிட்லர் கூட தேசியத் தலைவன் தான். National Socialist என்பதன் ஜேர்மன் பிரயோகமே நாஸியாயிற்று. தேசியத் தலைவன் என்று புகழப்பட்ட ஹிட்லரை ஜேர்மன்காரன் என்று சொல்லவே ஜேர்மன் வெட்கப்படும் காலம் இது. (தற்போதைய நவநாஸிகள் தவிர). எங்களுக்கு பிரச்சனைகளைத் தீர்க்கும் தலைவர்கள் தான் வேண்டும். வெறும் குறியீடுகள் (Symbols, Icons) அல்ல. மகாத்மா காந்தி தேசியத் தலைவர்.. பாகிஸ்தானைப் பிரிந்து போக வேண்டாம் என்று ஜின்னுவிடம் கேட்டார். முஸ்லிம்களைத் துரத்தி விட்டு தேசியத் தலைவர் என்ருல்..?

*பயணக்கட்டுரை;* ஊருக்கு வீட்டாரைப் பார்க்கப் போவோரும் திருமணம் செய்யப் போவோரும் எழுதுகின்ற இந்தக் கட்டுரைகள் பெரும்பாலும் யானை பார்த்த குருடர்கள் கதையாகத் தான் முடிந்திருக்கிறது. போய் வந்தவர்கள் எல்லாரும் புலிகளின் தியாகத்தைப் பார்த்து மெய் சிலிர்த்துப் போய் வந்திருப்பார்கள். ஆனுல் வெளிநாட்டு நிருபர்கள் மட்டும் போகும் போது இரகசியமாக 'புலிகள் சமாதானம் வருவதற்கு விட மாட்டார்கள்' என்று யாராவது சொல்வார்கள். பார்த்தீர்களா? தமிழர்கள் தமிழர்களையே நம்பவில்லை. வெளிநாட்டானை நம்புகிருர்கள்.

முன்பு எத்தனையே பெரும் புலிக் குட்டிகள் அங்கே போய் இங்கே விலாசமாய் 'புலிக்கு வேலை செய்வதாக சொல்லியும் வெளிநாட்டில் இருந்ததற்காக பணம் கட்டி வந்திருக்கிருர்கள். இவர்கள் எல்லாம் பயணக் கட்டுரை எழுதவில்லை. பேசாமல் ஒதுங்கிப் போயிருக்கிருர்கள்.

*மாபெரும்/ மகத்தான மலிவு விற்பனை;* மிகப்பெரிய பம்மாத்து இது. மகத்தான மலிவு விற்பனை செய்த பலர் கடையை மூடிக் கொண்டு விட்டார்கள். வருடம் பூராவும் மகத்தான, மாபெரும் மலிவு விற்பனை இருக்கும். வெளியாரின் கடைகளுக்குப் போனுல், upto 90% off என்று இருக்கும். மிஞ்சிய போணியாகாத பொருட்கள், சீசன் முடிந்த பொருட்கள் மலிவாக விற்கும். அதற்காக நூறு டொலர் பொருளை பத்து டொலருக்கு விற்கப் போவதில்லை. ஒரு ரூபாய் பொருளை பத்து சதத்திற்கு விற்பார்கள். அவ்வளவு தான். நம்மவர்கள் அப்படியல்ல.. நம்மவர்கள் மலிய வைப்பது ஆள் பிடிக்க.. பக்கத்துக் கடைக்காரனை வங்குரோத்து ஆக்க.. இதனுல் செலவுக்கும் கீழாக விற்பனை விலை இருக்கும். பத்து ரூபாய்க்கு வாங்கிய பொருளை ஒன்பது ரூபாய்க்கு விற்பதும் உண்டு. காரணம், பக்கத்துக் கடைக்காரர் புதிதாய் வந்து போட்டிக்கு சேர்ந்திருப்பார். மலிவாய் போட்டால் சனம் வரும், வந்து மற்றச் சாமானையும் வாங்கும் என்று கணக்கிட்டிருப்பார். வாற சனம் வந்து மலிவான பொருளை மட்டும் வாங்கிக் கொண்டு நடையைக் கட்டும். அதை வாங்குவதற்காக மூன்று மணி நேரம் பஸ் பயணம் செய்தும் வந்து வாங்கும். அப்புறமாய் இன்னெருவர் மலிவு விற்பனை போட்டால் அங்கு போகும். பிறகென்ன, ஏதாவது பேப்பரில் சிறு விளம்பரம் வரும்... ....... சந்தியில் தமிழ் வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டு. பொருட்களை மாபெரும் மலிவு விற்பனையில் விற்கப் போய், கடை மகத்தான மலிவு விலையில் விற்பனையாகும். இதுதான் உண்மையான விசர்த்தனமான மலிவு விற்பனை!

*நிகழ்ச்சி குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்;* எல்லா நிகழ்ச்சி தயாரிப்பாளர்களுமே நிகழ்ச்சி குறித்த நேரத்தில் ஆரம்பமாகும் என்று போட்டாலும் எல்லா ரசிகர்களுமே நேரத்திற்கு வந்தாலும் நிகழ்ச்சி ஆரம்பமாகாது. அல்லது நேரத்திற்கு ஆரம்பமாக தயாரானுலும் ரசிகர் கூட்டம் மண்டபத்தை நிறைத்திருக்காது. மாறி மாறி ஆளை மாறிச் சாட்ட வேண்டியது தான். இதை மறக்காமல் விமர்சகர்களும் நேரம் பிந்தி தொடங்கியதை விமர்சனத்தில் குறிப்பிட்டுக் கொள்வர்.

*கம்பியூட்டர் தமிழ் எழுத்துக்கள்;* எத்தனையோ மல்ற்றி மீடியாக்கள் தமிழ் எழுத்துக்கள் விற்பனை செய்து இப்போது விலாசம் இல்லாமலே இருக்கிருர்கள். தமிழ் கூறு நல்லுலகை பழுதாக்கியதே இவர்கள் தான். 'மாபெரும் மலிவு விற்பனையில்' தமிழ் எழுத்துக்களை விற்கப் போக, 'ஏதோ சும்மா' பத்திரிகைகள் நிறையத் தோன்றி ஒரே தலையிடி. கனடா தமிழ் பத்திரிகைகளில் ஒன்றைத் தவிர மற்றவை எங்கள் எழுத்துக்களை பாவிக்கின்றன என்று பெருமையாகக் கூறிக் கொண்டவர்கள் இவர்கள். (அந்த ஒரு பத்திரிகை தாயகம் தான். திருட்டு என்றே இவர்களால் கருதப்பட்டு..) பத்திரிகை ஆரம்பிக்க குறைந்த பட்ச தகுதி தமிழ் எழுத்துக்களை வைத்திருத்தல் என்ற மாதிரிப் போய் விட்டது. இதை தடை செய்தால் இனிமேலாவது 'தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக' 'ஏதோ சும்மா' பத்திரிகைகள் வெளிவருவது நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

English class க்கு போகிறேன்: பேச்சுவழக்கில் வெல்பெயர் எடுப்போர் குறிப்பிடுவது இதைத் தான். முதியோர் முதல் கொண்டு இளையோர் வரைக்கும் ஆண்டுக்கணக்கில் ஆங்கிலம் படிக்கப் போவார்கள். போய் வந்தாலும் ஆங்கிலம் கொஞ்சம் custom. வெல்பெயர் எடுத்துக் கொண்டு வீட்டில் 'ஏதோ சும்மா' இருக்க முடியாது. வேலை தேட வேண்டும். அல்லது படிக்க வேண்டும். படிப்பதற்கு ஆங்கிலம் சுலபமானது. இதற்காக தினசரி நித்திய கடமை மாதிரி போய் வரும் போது.

***இலக்கியம்/ கவிஞர்/ எழுத்தாளர்:*** கனடாவில் பத்திரிகைகள் மலிந்ததால் மலிந்து போனவை இவை. பத்திரிகைகளில் இலக்கியம் என்று மேலே கொட்டை எழுத்தில் போட்டு, கீழே இருக்கும்.. இந்தக் குளத்தில் கல்லெறிந்தவை என்ற வைரமுத்துவின் புத்தகக் கட்டுரை மறுபிரசுரமாயிருக்கும். வேறு சில பத்திரிகைகளுக்கு கம்ப ராமாயணக் காட்சிகள்தான் இலக்கியமாகும். அதெல்லாம் நாம எட்டாம் வகுப்பில் படித்தது. ஆசிரியர் எட்டாம் வகுப்போடு உயர் கல்வியை முடித்திருப்பாரோ? எட்டாம் வகுப்பு கேஸ் என்றுலே இப்படித் தான். (இதனால் தான் இவர்களின் யுத்த முனை நிருபர்களும் பாரதப் போர் காலத்துப் பெயர்களில் உள்ளனரோ?)

வேறு சில இலக்கியங்கள் இருக்கின்றன. முன்பு தாயகத்தில் பவான் எழுதிய அற்புதமான கதை ஒன்று.. எஸ்.பொ இந்தியாவில் வெளியிட்ட பனியும் பனையும் என்ற நூலில் வெளிவந்திருக்கிறது. புலம் பெயர்ந்த தமிழர் வாழ்வின் அவலத்தை அருமையாகப் படம் பிடித்துக் காட்டும் கதை அது. அந்தக் கதைக்கு சுஜாதா ஒரு சிறு முன்னுரையும் போட்டு பாராட்டி எழுத, இங்கே மஞ்சரி அதை இலக்கியம் என்று பிரசுரித்து விட்டது. அது தான். தாயகத்தில் வெளிவந்தால் அது இலக்கியம் இல்லை. அதை இந்தியாவில் யாராவது பாராட்டியதற்கு அப்புறம் தான் இவர்களுக்கு அது இலக்கியமாகும். வாழ்க இலக்கியப் பிரக்ஞை!

நம்ம ஜெயந்தீஸன் கதை ஒன்றும் குமுதத்தில் வெளிவந்திருக்கிறது. அதுவும் தாயகத்தில் வந்தது தான். இங்கே வரும் மற்றப் பத்திரிகைகளில் வந்திருந்தவை அங்கே வெளிவந்திருந்தால்.. தங்கள் பத்திரிகைக்கு கிடைத்த அங்கீகாரம் என்று மறுபிரசுரம் செய்திருப்பார்கள்.

இந்த பத்திரிகைகளில் இலக்கியம் வந்த பின்னால் எழுத்தாளர்கள், கவிஞர்கள் மலிந்து விட்டார்கள். ஊரில் சில கவிஞர்கள் தான் இருந்தார்கள். கவிஞர் வி.கந்தவனம், காரை சுந்தரம்பிள்ளை என்று.. இவர்கள் கவிஞர்கள் என்று எல்லாருமே அறிந்தவர்கள். கவியரங்குகள் மூலம் பட்டி தொட்டிகளில் கவிதைக்கு பெருமை சேர்த்தவர்கள். ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். இந்தியாவில் சினிமாக் கவிஞர்கள் கண்ணதாசன் முதல் வைரமுத்து வரை, மேத்தா முதல் ரகுமான் வரை பிரபலம்.

பின்னுளில் இங்கே ஒரே ஒரு கவிஞர் தான் இருந்தார். பொற்கைப் பாண்டியர். இப்போது ஆளுக்காள் கவிஞர்கள் என்று பெயருக்கு முன்னால் போடப் புறப்பட்டு விட்டார்கள். மற்றவர்கள் போடாததால் இவர்கள் தாங்களே போட்டுக் கொள்வார்கள். (ஒருதலைக்) காதலிகளுக்கு காதல் கடிதம் கவிதையாக எழுதியவர்களும் (பின்னால் அடி வாங்கியது வேறு விடயம்) தங்களை இளங்கவி(ஞர்) என்று அழைக்கத் தொடங்கி விட்டார்கள். கவிதை எழுதுபவர்கள் எல்லாம் தங்கள் வெறும் பெயரைப் போட்டுக் கொள்ள, ஜால்ராக்கள் தான் பெயருக்கு முன்னால் கவிஞர் போடத் தொடங்கி விட்டன. பிறகென்ன, மேடை கொடுக்க ஒரு கூட்டம், முதுகு சொறிய ஒரு கூட்டம், இவர்களும் தலைக்கு மேல் ஏறி தாங்களும் கவிஞர்கள் என்று கூட சொல்லாமல் தாங்கள் தான் கவிஞர்கள் என்று புறப்பட்டு விடுவார்கள்.

கியூறியஸ்க்கு தெரிந்த ஒருவர் இருக்கிறார்.. இவர் நாலு பேர் சேர்ந்திருந்தால் போதும், ஒரு கவிதை அவிழ்த்து விடுவார். அது பிறந்த நாளாக இருந்தால் என்ன, மரணச் சடங்காக இருந்தால் என்ன?

கவிஞர்கள் போலவே எழுத்தாளர்களும்... எழுதியவர்கள் எல்லாம் கம்மென்று பேசாமல் இருக்க.. நினைவு தினக் கட்டுரைகள் எழுதியவர்கள் எல்லாம் சங்கம் அமைத்து தங்களை எழுத்தாளர் சங்கத் தலைவர்கள் என்று லெட்டர் ஹெட் அடித்துக் கொண்டு 'தமிழாராய்ச்சிக்கு' புறப்படுகிறார்கள். நல்ல காலம்.. விசா கிடைக்காததால் தமிழ் தப்பித்தது. போய் நாடு

*26 ம் பக்கம் பார்க்க..*

***This newspaper is published by Georgicka communications.***
***A member of Ethnic Press Council Of Canada.***
***Editor: George R.Ckrhushchev***
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

---

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

---

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

முத்திரை, சிகரெட்,
போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்
TTC Tickets,
Lottery Tickets

உடன்
மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழ
வகைகள்


தமிழக,
இலங்கை,
கனடிய
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள்
அனைத்தும்

★ மலிவு விலையில்
லேசர் இசைத்தட்டுக்கள்
★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

# ANTONY BROTHERS

வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 11 மணி வரை

**1472 Queen St West (Queen/Lansdowne)**
**Toronto, Ont. M6K 1M4**
**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
ஆண்கள், பெண்கள்,
குழந்தைகளுக்கான
உடைகள்

சுவாமிப் படங்கள்,
பரிசுப் பொருட்கள்,
பெண்களுக்கான அலங்காரப்
பொருட்கள், எவர்சில்வர்
பாத்திரங்கள், ஒலிப்பதிவு,
ஒளிப்பதிவு நாடாக்கள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

SIVA'S TRADING CO LTD

ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

★ தயாரிக்கப்பட்ட
உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
உடனுக்குடன் கிடைக்கும்

அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்

**3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)**
**TEL:(416) 321 2739**

# P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ்,
இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**
**TEL:609-0141**

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media